REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜனவரி 6 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 05 | Friday 06, January, 2023 | 12பக்கங்கள் | 50/-

## புலமைப்பரிசில் மாதிரிவினாத்தாள் இன்று முதல் மீண்டும் தினகரனில்!



தரம் 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வினாத்தாள் அடங்கிய இலவச இணைப்பிதழ் இன்று முதல் மீண்டும் தினகரனில் வெளிவருகின்றது.

பிரதி வெள்ளிக்கிழமை தோறும், உங்கள் பிரதிகளை தவற விடாதீர்கள்!

### வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு

## சவால்களிலிருந்து மீள அரசு வெற்றிகரமான தீர்வை காணும்

### பிரதமர் தினேஷ் பாராளுமன்றத்தில் நம்பிக்கை தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடு எதிர் கொண்டுள்ள சவால்களை வெற்றி கொள்வதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வர வேண்டும் என பாராளுமன்றத்தில் அழைப்பு விடுத்த பிரதமர் தினேஷ் குணவர்தன, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள சுமை போன்ற சவால்களிலிருந்து மீள்வதற்கு அரசாங்கம் தீர்வுகளைக் காணும் என்ற நம்பிக்கையையும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம் என்றும் தெரிவித்தார்.

எதிர்வரும் வருடங்களை சவால்களை வெற்றிகொள்ளும் வருடங்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் என்ற வகையிலும் பாராளுமன்றம் என்ற ரீதியிலும் ஒற்றுமையாக செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் வலியுறுத்தினார்.

புதிய வருடத்தின் முதலாவது பாராளுமன்ற அமர்வு நாளான நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் சபாநாயகர் மற்றும் அனைத்து

04

## உள்ளூராட்சி சபை தேர்தலை தடுக்க அரசாங்கம் முயற்சிக்கவில்லை

### நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச சபையில் எதிர்க்கட்சிக்கு பதில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உள்ளூராட்சி சபை தேர்தலை தடுப்பதற்கு அரசாங்கம் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபையில் நேற்று எதிர்க்கட்சியினர் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கும் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கே உள்ளதாகவும் ஆணைக்குழுவிற்கு கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கோ அல்லது அரசாங்கத்திற்கோ கிடையாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் மூலம் அந்த அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கே வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

04

## இந்தாண்டில் 500 புதிய பஸ்கள் பொது போக்குவரத்தில் இணையும்

### அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

**இந்திய கடன் திட்டத்தின் கீழ் கிடைத்த 75 பஸ்கள் நேற்று கையளிப்பு**



"இந்த ஆண்டு 500 புதிய பஸ் வண்டிகள் பொது போக்குவரத்துக்கு இணைத்துக் கொள்ளப்படுமென போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன

04

### கொழும்பு துறைமுகத்தில் மீட்கப்படாத

## 24,000 கிலோ தோடம்பழங்கள் ஆஸ்பத்திரிகளுக்கு கையளிப்பு




இறக்குமதி செய்யப்பட்டு துறைமுகத்திலிருந்து மீட்கப்படாமல் மூன்று கொள்கலனில் அடைக்கப்பட்டிருந்த மஞ்சள் நிற தோடம்பழங்களை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்க துறைமுக,கப்பற்றுறை, விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தீர்மானித்துள்ளார்.

04

## இலங்கையருக்கு அமெரிக்காவில் 550 வேலை வாய்ப்புகள் உறுதி

### இலங்கை தூதுவர் மஹிந்த சமரசிங்க அறிவிப்பு



03

# நாட்டின் இறையாண்மையை பாதுகாக்க சிறந்த வெளியுறவுச் சேவை அவசியம்

### தூதரக சேவைக்காக செல்லும் புதிய தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்களுக்கு ஜனாதிபதி வலியுறுத்து

### நாட்டின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்கு ஏனைய வெளிநாடுகளின் ஆதரவைப் பெற அர்ப்பணிப்புடன் செயற்படுமாறும் தெரிவிப்பு



இலங்கையின் இறையாண்மையைப் பேணிக்காக்கும் வகையில் சிறந்த வெளியுறவுச் சேவையின் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி தூதரக சேவைக்காக செல்லும் புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் 11 பேரை நேற்று முன்தினம் (04) ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்கு ஏனைய வெளிநாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி,

முதலில் சிறந்த வெளியுறவுக் கொள்கையைக் கொண்டிருப்பதும் இரண்டாவதாக நட்புறவைக் கட்டியெழுப்புவதும் தான் நமது அரசாங்கத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

பொருளாதாரத் திட்டமிடல், பாதுகாப்பு நோக்கங்கள் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான இலக்குகளை நாம் நிறைவு செய்ய வேண்டும். இந்த நோக்கங்களை அடைவது, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராஜதந்திர பிரதானிகளின் செயல்திறனிலே தங்கியுள்ளது.

வெளிநாடுகளுடன் உறவுகளை வளர்த்து, அங்குள்ள இலங்கையரின் உரிமைகளைப் பாதுகாப்பதும் எமது பிரதான

04

## தனித்தனியாக போட்டியிடுவது கூட்டமைப்பின் இலட்சியமல்ல



### த.தே.கூ. ஒற்றுமையாக போட்டியிட வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பு

**மன்னார் குறூப் நிருபர்**


தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக போட்டியிட வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பு. தனித்தனியாக போட்டியிடுவதென்பது எமது இலட்சியமல்ல என தெரிவித்துள்ள வன்னி மாவட்ட த.தே.கூ பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்தனியாக போட்டியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக போட்டியிட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் (04) ஊடகங்களுக்கு கருத்து

04

## லிற்றோ சமையல் எரிவாயு விலை 201 ரூபாவால் குறைப்பு

### 12.5 Kg– ரூ.4,409 – 05 Kg ரூ.1,770



லிற்றோ சமையல் எரிவாயு விலை நேற்று குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை தொடர்பான விபரங்களை லிற்றோ நிறுவனம் வெளியிட்டுள்ளது.

அதன்படி 12.5 கிலோ லிற்றோ சமையல் எரிவாயுவின் விலை 201 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 4,409 ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.


04

### இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் செயற்பாடுகளில்

## முஸ்லிம் தரப்பையும் இணைத்துக்கொள்ள ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பது அவசியம்

### பாராளுமன்றத்தில் ரவூப் ஹக்கீம் எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் செயற்பாடுகளில் முஸ்லிம் தரப்பையும் இணைத்துக் கொள்ள ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பது அவசியம் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சகல தரப்புகளும் இணங்கும் சிறந்த தீர்வை மிக விரைவில் பெற்றுத்தருவதற்கான முயற்சியை ஜனாதிபதி உளப்பூர்வமாக எடுப்பாரானால் அதில் முஸ்லிம் தரப்பையும் இணைத்துக்கொள்ள நடவடிக்கை

04

## சமஷ்டி முறையிலான அர்த்தமுள்ள தீர்வே கூட்டமைப்பின் எதிர்பார்ப்பு

### பாராளுமன்றத்தில் எம்.ஏ சுமந்திரன் எம்பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வையே எதிர்பார்ப்பதாகவும் சமஷ்டி அடிப்படையிலான அர்த்தமுள்ள அதிகார பகிர்வாக அது அமைய வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எதிர்பார்ப்பாக உள்ளது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பேச்சுவார்த்தை எதிர்வரும் 10 ஆம்திகதி ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்கொள்ளப்படும் அரசியல் தீர்வு அர்த்தம் உள்ளதாக அமைய வேண்டும் எனவும் அர்த்தமற்ற அரசியல் தீர்வை நாம் கோரப்போவதுமில்லை, ஏற்கப்போவதுமில்லை என்றும்

04



### 2023 இல் கொவிட் 19 தலைதூக்கும் சாத்தியம்

## பூஸ்டர் தடுப்பூசியாக சினோபார்ம் தடுப்பூசியை பயன்படுத்த தீர்மானம்

03



### ஸ்ரீ தலதா மாளிகையை அவமதித்த விவகாரம்

## மத நல்லிணக்கத்தை சீர்குலைப்போருக்கு எதிராக கடும் சட்டம் பிரயோகிக்கப்படும்

03



## நிலக்கரி ஏற்றிய 07 கப்பல்கள் இன்று முதல் இலங்கை வருகை

### நுரைச்சோலையிலிருந்து தொடர்ந்தும் மின்சாரம்

03

### 22 கரட்டுக்கு மேற்பட்ட

## தங்க ஆபரணங்களை கொண்டு வருவது தடை

### விசேட வர்த்தமானி நேற்று வெளியீடு



நாட்டுக்குள் தங்கக் கடத்தலை தடுக்கும் நோக்கில் 22 கரட்டுக்கு மேற்பட்ட தங்கத்தை ஆபரணங்களாக கொண்டு வருவதற்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இத் தடையை விதிக்கும் வகையிலான வர்த்தமானி அறிவித்தலை நிதி அமைச்சு நேற்று வெளியிட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

### யாழ்.– சென்னை கப்பல் சேவை இம் மாதம் ஆரம்பம்

## இந்திய ஏற்றுமதி, இறக்குமதிகளை காங்கேசனிலிருந்தே ஆரம்பியுங்கள்

### யாழ். வணிகர் சங்கம் யாழ். வர்த்தகர்களுக்கு அழைப்பு

**பருத்தித்துறை விசேட நிருபர்**



இந்தியாவிலிருந்து கொழும்பு ஊடாக இதுவரை ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த யாழ். வர்த்தகர்களை காங்கேசன்துறைக்கும் இந்தியாவுக்குமிடையே ஆரம்பிக்கப்படவுள்ள சரக்குக் கப்பல் சேவையூடாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுமாறு யாழ்.வணிகர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

இக் கப்பல் சேவை மூலம் வடமாகாணம் பொருளாதாரத்தில் முன்னேறக் கூடிய சாத்தியம் இருப்பதாகவும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

இக் கப்பல் சேவையை ஆரம்பிக்கவுள்ள நிறுவனம் நாளை சனிக்கிழமை 07ஆம் திகதி வணிகர் கழகத்துக்கு வருகை தரவுள்ளதுடன் அவர்களுடன் இது தொடர்பாக கலந்துரையாட இருப்பதாகவும் யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

04

### சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வுக்காக

## அனைத்து தமிழ் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும்



### வடக்கு, கிழக்கில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்

மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வு, அனைத்து தமிழ் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும், அரசுடனான பேச்சுவார்த்தைகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மையாக இருக்க வேண்டுமென்ற கருத்துக்களை வலியுறுத்தி நேற்று வடக்கு கிழக்கில் கவனயீர்ப்பு

04

# நகர்வலம்



## காட்டு யானைகள் வீதியில்; மக்கள் நடமாடுவதில் அச்சம்

### சம்பந்தப்பட்டோர் கவனம் செலுத்துமாறு கோரிக்கை

திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுரம் தேவநம்பிய திஸ்ஸபுரம் நீராவிய பகுதியில் காட்டு யானைகளின் நடமாட்டத்தினால் பிரதேச பொது மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

நீராவிய பகுதியில் உள்ள தேக்கு மரத் தோட்டத்தில் தங்கி நிற்கும் காட்டு யானைகளின் அச்சுறுத்தலாலே இப் பிரதேச மக்கள் அச்சமடைய காரணம் என மக்கள் தெரிவிக்கின்றனர். இரவு முழுவதும் வீட்டின் வெளிப்புறங்களில் மின் வெளிச்சங்களை போட்டு, அச்சத்தின் காரணமாக வீடுகளிலேயே மக்கள் தங்கியிருக்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் இறுதியில் இப் பகுதியை சேர்ந்த 17 வயதுடைய முஸ்லிம் இளைஞன் ஒருவரை யானை ஒன்று துரத்தி துரத்தி நிலத்தில் அடித்து, காயப்படுத்தி பின்னர் கடுமையான காயத்துக்கு உள்ளான குறித்த இளைஞன் மரணமான சோக நிகழ்வு இப் பகுதியில் பதிவாகியுள்ளதை மக்கள் ஞாபகத்தில் வைத்துள்ளனர்.

இப்பகுதியில் நடமாடும் காட்டு யானை கூட்டங்களால் தமது விவசாய நிலங்கள் கூட அழிவுக்கு உட்படுவதாகவும் இவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வந்து காட்டு யானைகளின் அச்சுறுத்தலில் இருந்து தம்மை விடுவிக்க வேண்டும் என இப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## யூரியா உரப்பைகள் விற்பனையில் மோசடி;

# மிஹிந்தலை விவசாய அமைப்பின் தலைவர் உட்பட இருவர் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

மிஹிந்தலை மரதன்கல்ல பிரதேசத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட 21 யூரியா பைகளை வேறு ஒருவருக்கு அதிகவிலைக்கு விற்பனை செய்த விவசாய அமைப்பின் தலைவர், பொருளாளர் மற்றும் அதனுடன் தொடர்புடைய நபர் உட்பட மூவரை மிஹிந்தலை பொலிசார் (04) கைது செய்துள்ளனர்.

மிஹிந்தலை ஐக்கிய விவசாயிகள் அமைப்பின் தலைவர், பொருளாளர் ஆகியோருக்கு யூரியாவை பெற்றுக்கொள்ள தவறான விதத்தில் பணம் வழங்கிய நபர் உள்ளிட்ட மூவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

மரதன்கல்ல பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய விவசாயி ஒருவர் மிஹிந்தலை பொலிஸ் நிலையத்தில் செய்திருந்த முறைப்பாட்டிற்கமைய குறித்த மூவரும் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் பொலிசார் மூவரையும் கைது செய்துள்ளனர்.

தங்களுக்கு கிடைக்கவேண்டிய உரத்தை வேறு ஒருவருக்கு தவறான கையெழுத்திட்டு பெற்று கொடுத்துள்ளதாக குறித்த நபர் பொலிஸ் நிலையத்தில் செய்திருந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## GI இரும்பு குழாய்கள் சட்டவிரோதமாக விற்பனை;

### இருவர் கைது

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

பெலியத்தை மஹஹீல்லபெரகும் சமூக நீர்ப்பாசன திட்டத்திற்கென கொண்டு வரப்பட்ட ஜீ. ஐய் 11 இரும்பு குழாய்களை சட்டவிரோதமான முறையில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் பெலியத்தை பிரதேச சபையின் தலைவர் மற்றும் அவரது சகோதரர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாக பெலியத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

பெலியத்தை பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து வாக்கு மூலம் பெறுவதற்காக பிரதேச சபை தலைவருக்கு அழைப்பாணை விடுத்து அங்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டபோதே அவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.




லேக்ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதுவருடத்திற்கான கலண்டர் விநியோகமும் நேற்று முன்தினம் (04) நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது 2023/2025ஆம் ஆண்டுக்கான மஜ்லிஸின் புதிய தலைவராக தினகரன் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் ஷம்ஸ் பாஹிம், செயலாளராக றிஸ்வான் சேகு மொஹிதீன் (இணையதள ஆசிரியர்), பொருளாளராக எம்.என்.எம். றிஸ்வான் (சிரேஷ்ட கணினி இயக்குநர், விளம்பரப்பகுதி) உட்பட உப தலைவர், உப செயலாளர், உப பொருளாளர் மற்றும் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிகழ்வில் முதலாவது கலண்டரை தினகரன் பத்திரிகையின் இணையாசிரியரும் மஜ்லிஸின் ஆலோசகருமான மர்லின் மரிக்காருக்கு புதிய தலைவர் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

## களுத்துறை; முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன மாநாடு

பேருவளை விசேட நிருபர்

களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் வருடாந்த மாநாடு எதிர்வரும் 8ம் திகதி மு.ப.9.00 மணிக்கு பேருவளை மருதானை அரப் வீதியில் உள்ள முன்னாள் சபாநாயகர் தேசமான்ய எம்.ஏ.பாக்கீர் மாக்காரின் இல்லத்தில் நடைபெறும்.

மாவட்ட சம்மேளன தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம். இக்பால் ஸம்ஸுதீன் (ஜே.பி) தலைமையில் நடைபெறும் இம் மாநாட்டில் களுத்துறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுவர்.

2023 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்படவுள்ளதோடு களுத்துறை மாவட்ட முஸ்லிம் கிராமங்களில் நிலவும் கல்வி,சமூக,தொழில் மற்றும் முக்கிய குறைபாடுகள் பற்றியும் ஆராயப்படவுள்ளன.

முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உட்பட அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன முக்கியஸ்தர்கள் பலரும் பங்கு பற்றவுள்ளதாக மாவட்டச் செயலாளர் றிஸ்மி மஹ்றூப் தெரிவித்தார்.

## புத்தளத்தில் இன்று மாபெரும் கவியரங்கு

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் "வளர்ந்து வரும் கலைஞர்கள், திறமையாளர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கு புத்துணர்ச்சியூட்டும் நிறுவனமான "CREATE" புத்தளத்தில் மாபெரும் கவியரங்கொன்றை ஒழுங்கு செய்துள்ளது.

இன்று 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8.00 மணிக்கு, புத்தளம் நகரமண்டப வளாகத்தில் இக்கவியரங்கு இடம்பெறவுள்ளது.

"முஹம்மத் என்ற முன்மாதிரி மனிதர்" என்ற கருப்பொருளில் 09 கவிஞர்களின் பிரசன்னத்தில் இக்கவியரங்கு நடைபெறும்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பன்முக ஆளுமைகள் பல கோணங்களில் பகிரப்படவுள்ளன.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த இசை நிகழ்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது இசைக் கலைஞர் ரத்னம் ரத்னதுரையின் கலைச் சேவையை பாராட்டி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் பிரிவு ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் பரிசு வழங்குவதை படத்தில் காணலாம்.

## சென்னை இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் 2023ஆம் ஆண்டின் புதுவருட பணிகள் ஆரம்பம்

சென்னையிலுள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகராலயம் 2023ஆம் புதுவருடத்திற்கான உத்தியோகபூர்வ பணிகள் பிரதி உயர்ஸ்தானிகர் டாக்டர் வெங்கடேஷ்வரன் தலைமையில் (02) தேசிய கொடி ஏற்றப்பட்டு நிகழ்ச்சிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. தேசிய கீதம் இசைக்கப்பட்டபின் தாய்நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த போர்வீரர்கள் மற்றும் ஏனைய அனைவரையும் நினைவுகூரும் வகையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. அதன்பின், அனைத்து ஊழியர்களும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். பிரதி உயர்ஸ்தானிகர் உரையாற்றும் போது, தற்போதைய சவால்களை வெற்றிகொள்வது மற்றும் இலக்குகளை அடைவதில் அரச ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டுமெனவும் இதனையே ஜனாதிபதியும் தனது புத்தாண்டு நிகழ்வின்போது வலியுறுத்தியுள்ளதாகவும் தனது உரையில் ஞாபகப்படுத்தினார்.



## சிரேஷ்ட அறிவிப்பாளர் நௌபீல் சுவதம் விருது பெற்றார்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிறை எப்.எம். வானொலியின் சிரேஷ்ட அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம்.நௌபீல் அரச சுவதம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சானின் தலைமையில், அட்டாளைசேனை மத்திய கல்லூரியின் மண்டபத்தில் இடம்பெற்ற இந்த சுவதம் விருது வழங்கும் விழாவின் போது அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீஸ்வரன், கலாசார உத்தியோகத்தர் ஏ.எச்.சபீகா ஆகியோரின் முன்னிலையில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக்கிடமிருந்து இவ்விருதினைப் பெற்றுக் கொண்டார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு சூரியன் எப்.எம். அலைவரிசையின் மூலம் தனது ஒலிபரப்புத்துறை வாழ்வை ஆரம்பித்து, அதே ஆண்டு செடெம்பர் மாதம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராகத் தெரிவானார்.

அன்று முதல் தனது காந்தக் குரலால் பலரது பாராட்டையும் பெற்றுள்ள இவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தென்றல் அலைவரிசை மற்றும் ஆசிய ஒலிபரப்பு, கொழும்பு சர்வதேச ஒலிபரப்பு ஆகியவற்றிலும் பணி புரிந்துள்ளார்.

ஏ.ஆர்.எம். அட்வடைசிங் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஏ.ஆர்.எம் நௌபீல், விளம்பரத்துறையிலும் சிறந்து விளங்குவதோடு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிறை எப். எம். வானொலியில் தற்போது நிரந்தர அறிவிப்பாளராகவும் பணியாற்றி வரும் இவர், மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

## தென்மாகாணம்;

## 5ம் தர புலமைப்பரிசில், சா/த, உ/த பரீட்சைகளில்; சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு



வெலிகம தினகரன் நிருபர்

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) ஆகிய பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த சாதனையாளர்கள் தென்மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளின் புதிய பிரதிக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் மின்ஹாத் தேசிய பாடசாலை அதிபர் அஷ்ஷெய்க். எம்.ஏ.எம். மொஹிர் (நளீமி) ஆகியோரைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு (04) புதன்கிழமை மின்ஹாத் தேசிய பாடசாலை கலாநிதி பதியுதீன் மஹ்மூத் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

OSDEM DFFC நிறுவன விஞ்ஞான, கணித செயற்திட்ட அனுசரணையுடன் கல்லூரி அதிபர் எம்.ஏ. அஸ்வான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக டாக்டர் இக்ராம் நிதாம், கௌரவ அதிதியாக ஹாஜியானி நிஹ்லா பௌஸ் இக்ராம் மற்றும் விசேட அதிதிகளாக நிறுவனத்தின் தலைவர் அல்ஹாஜ் எம். இஸட். பௌஸுல் ஹக், தென்மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க். எம்.ஏ.எம். மஷாஹிர், நிறுவனத்தின் பொருளாளர் அல்ஹாஜ் எம்.எச்.எம். நஸார், மற்றும் செயலாளர் எம்.எம்.எம். அத்ஹர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த்த சாதனையாளர்கள் நினைவுச் சின்னங்களும் பணப்பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.





### புத்தளம் ஸாலிஹீன் பள்ளிவாசல்

## போதைப்பொருள் தொடர்பில் மக்களுக்கு அறிவித்தல்

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் கடுமையான் குளம் வீதி ஸாலிஹீன் பள்ளி நிர்வாகத்தினால் போதைப்பொருள் வியாபாரம் செய்வோருக்கு மற்றும் பயன்படுத்துவோருக்கு எதிராக பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த சில காலங்களாக குறித்த பகுதியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து காணப்படுவதுடன் அதன் விளைவுகளும் மிக மோசமாக காணப்படுவதால் 2023 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மஸ்ஜித் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் (ஐஸ்) பயன்படுத்தும் மற்றும் வியாபாரிகளின்

குடும்பங்களில் நடைபெறும் திருமணத்திற்கு பள்ளிவாயலினால் எவ்வித ஒத்துழைப்பும் வழங்கப்பட மாட்டாது.

இவர்களின் குடும்பங்களில் ஜனாஸாக் கடமைகளுக்கு பள்ளிவாயலினால் எவ்வித ஒத்துழைப்பும் வழங்கப்படாது. இவர்களுக்கு பள்ளியில் நடைபெறும் எந்த நல்ல விடயங்களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட மாட்டாது.(அழைக்கப்படவும் மாட்டார்கள்)

இவர்களின் பெயர் விபரங்கள் விளம்பரப் பலகை மூலம் காட்சிப்படுத்தப்படுவதோடு இவர்களின் விபரங்களை உயர் அதிகாரிகளிடம் தெரியப்படுத்தி மிகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவர்களின் மஹல்லா உரிமம் இரத்துச் செய்யப்படும். அதேநேரம், மேற்குறிப்பிட்ட விடயங்களை சம்பந்தப்பட்டவர்கள் கருத்திற் கொள்ளுமாறும் பள்ளி நிர்வாகம் கேட்டுக்கொள்கின்றது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜனவரி 6 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්




தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 05.02 |
| ளுஹர் | 12.17 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.08 |
| இஷா | 07.23 |

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் மார்கழி 22

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை நேற்று முன்தினம் அவரது இல்லத்தில் சந்தித்து உடல் நலம் தொடர்பில் விசாரித்தார். பின்னர் இனப்பிரச்சினை தீர்வு குறித்தும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

2023 இல் கொவிட் 19 தலைதூக்கும் சாத்தியம்:

## பூஸ்டர் தடுப்பூசியாக சினோபார்ம் தடுப்பூசியை பயன்படுத்த தீர்மானம்




இலங்கையில் கொவிட்19 பூஸ்டர் தடுப்பூசியாக சீனாவின் சினோபார்ம் தடுப்பூசியை பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. பைசர் தடுப்பூசிகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்த ஆண்டில் கொவிட்19 தொற்று தலைதூக்கும் சாத்தியம் காணப்படுவதாகவும், இதனால் பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

1.8 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவு பொறுப்பாளர் டொக்டர் சமித கினிகே தெரிவித்துள்ளார்.

உலகளவில் கொவிட்19 தொற்று அதிகரித்து வரும் நிலையில் இலங்கையில் தற்போதைக்கு பாரியளவு ஆபத்து கிடையாதென தெரிவித்துள்ளார்.

புதிய திரிபுகள் நாட்டுக்குள் பரவுவதை முழுமையாக

04



முன்னாள் பாப்பரசர் 16ஆம் பெனடிக்ட் ஆண்டகையின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, பிரதமர் தினேஷ் குணவர்தன கொழும்பிலுள்ள புனித அப்போஸ்தலிக்க தூதரகத்தின் (Vatican Apostolic Nunciature) அனுதாப செய்தியை பதிவுசெய்யும் புத்தகத்தில் நேற்று கையெழுத்திட்டார். இந்நிகழ்வில் வத்திக்கான் அப்போஸ்தலிக்க தூதுவர் அருட் தந்தை பிரையன் உடைக்வே (Rt. Rev. Brian Udaigwe)யுடன் ஒரு சிறிய கலந்துரையாடலிலும் பிரதமர் ஈடுபட்டார்.

ஆட் கடத்தல் தடுப்பு, மீன்பிடி, கல்வித்துறைகளில்

# ஒத்துழைப்புகளை மேம்படுத்த ஆஸியும் இலங்கையும் இணக்கம்

ஆஸி. உயர் ஸ்தானிகருடன் பிரதமர் சந்திப்பு

இந்து சமுத்திர பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்த இலங்கைக்கு வழங்கிய உதவிக்கு அவுஸ்திரேலியாவுக்கு நன்றி தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, தகவல் தொடர்பு வலையமைப்பை வலுப்படுத்த மீன்பிடி படகுகளுக்கு ஜிபிஎஸ் தொழில்நுட்பத்தை வழங்க உதவுமாறும் கேட்டுக்கொண்டார்.

அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் நேற்று (05) பிரதமர் அலுவலகத்தில் பிரதமரைச் சந்தித்த போதே அவர் இவ்வேண்டுகோளை விடுத்தார்.

உள்நாட்டு மாணவர்களை மட்டுமின்றி, ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளிலிருந்தும் மாணவர்களை ஈர்க்கும் வகையில் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்கள் இலங்கையில் இணைந்த வளாகங்களை நிறுவ முடியும் என்றும் பிரதமர் கூறினார். மீன்பிடி, விவசாயம், தகவல் தொழில்நுட்பம், மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவளம், இலத்திரனியல் மற்றும் சுற்றுலா போன்ற புதிய துறைகளிலும் முதலீட்டாளர்கள் வருகை தர வேண்டும் என்றும் பிரதமர் கூறினார்.



தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள, குறிப்பாக சுமார் 75 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் பெறுமதியான மருந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களை இலங்கைக்கு வழங்கியமைக்காக பிரதமர் அவுஸ்திரேலியாவுக்கு நன்றி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களிலும் பாரிஸ் கிளப் கூட்டங்களிலும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக

04

ஸ்ரீ தலதா மாளிகையை அவமதித்த விவகாரம்:

## மத நல்லிணக்கத்தை சீர்குலைப்போருக்கு எதிராக கடும் சட்டம் பிரயோகிக்கப்படும்

நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



மத நல்லிணக்கம் மற்றும் இன நல்லிணக்கம் நாட்டில் கட்டியெழுப்பப்பட்டுள்ள நிலையில் எந்த வகையிலும் அதனை சீர்குலைக்க முயல்வோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பௌத்த மதம் மட்டுமின்றி ஏனைய அனைத்து மதங்களினதும் நம்பிக்கையை சீர்குலைப்பதோ அல்லது மதங்கள் மீதான கௌரவத்தை சிதைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதோ அது பாரிய குற்றமாக கருதப்பட்டு நாட்டில் நடைமுறையில் உள்ள தண்டனைக் கோவை சட்டத்தின் 290 வது சரத்திற்கு இணங்க அதற்கு எதிராக பத்து வருட சிறைத் தண்டனையை வழங்கவும் முடியும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பௌத்தர்களின் முக்கிய மத வழிபாட்டுத் தலமான ஸ்ரீ தலதா மாளிகையை அவமதிக்கும் வகையில் சமூக வலைத்தளங்கள் மூலம் கருத்துக்களை வெளியிட்டு வரும் சேபால அமரசிங்க தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் பலராலும் பெரும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

அவர் தொடர்பில் கடுமையான சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் சபாநாயகரைக் கேட்டுக் கொண்டனர்.

அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அவர்:

ஸ்ரீ தலதா மாளிகை இலங்கை மக்களின் கௌரவத்தை மட்டுமின்றி முழு உலகினதும் கௌரவத்தை பெற்றுள்ள முக்கிய தலமாகும். அந்த வகையில் அதன் கௌரவத்திற்கு பங்கம் ஏற்படும் வகையிலோ அவமதிப்பு ஏற்படும் வகையிலோ கருத்துக்களை வெளியிடுவதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது.

நாட்டில் தற்போது இன, மத பேதமின்றி மக்கள் மத்தியில் சிறந்த நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

04

## இலங்கையருக்கு அமெரிக்காவில் 550 வேலை வாய்ப்புகள் உறுதி

இலங்கை தூதுவர் மஹிந்த சமரசிங்க அறிவிப்பு



வொஷிங்டன் டி.சி. யிலுள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரமைப்புடன் இணைந்து, அமெரிக்காவில் 550 வேலை வாய்ப்புக்களுக்கான உறுதி செய்யப்பட்ட தொழில் உத்தரவைப் பெற்றுக்கொண்டுள்ளது.

தூதுவர் மஹிந்த சமரசிங்க, புளோரிடாவின் மெசர்ஸ் கர்மா சேர்விசஸ் எல்.எல்.சி நிறுவனத்தை தொடர்பு கொண்டு கர்மா சேர்விசஸ் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரமைப்புக்கிடையேயான ஒப்பந்தத்தை செய்து கொண்டதுடன், இதன் வாயிலாக 250 பதிவு செய்யப்பட்ட தாதியர், 100 ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் 200 தாதி உதவியாளர்களுக்கு அமெரிக்காவில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான உத்தரவு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

முழுமையாக அரசுக்குச் சொந்தமான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் துணை நிறுவனமான

04

## 40,000 சிறுவர்களை இலக்காகக் கொண்ட மந்தபோசன நிவர்த்தி செயற்றிட்டம்

ஒருவருக்கு 14,000 ரூபா செலவிட தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

கொரோனா கட்டுப்படுத்தல் நடவடிக்கைகள் போன்று நாட்டிலுள்ள போசாக்கு குறைந்த 40,000 சிறுவர்கள் தொடர்பில் விசேட செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்தத் திட்டத்தின் கீழ் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள 21,000 சிறுவர்களுக்கு ஒருவருக்கு 14,000 ரூபா வீதம் செலவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் தயாசிறி ஜயசேகர எம்.பி எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தயாசிறி ஜயசேகர எம்.பி, தமது கேள்வியில் சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கான சத்துணவு மற்றும் திரிபோச வழங்கும் திட்டம் தொடர்பில் கேள்வியெழுப்பினார்.

அது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அமைச்சர் ரம்புக்வெல்ல:

சிறுவர்களுக்கான போசனைத் திட்டம் தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகள்

04

நிவாரண செயற்றிட்ட விண்ணப்பம்:

## தகுதியானவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்

இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல்

லோரன்ஸ் செல்வநாயகம்



அரசாங்கத்தின் சமூக நலன்புரி சபையின் மூலம் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான செயற்றிட்டத்திற்கு இதுவரை 37 இலட்சம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இந்த விண்ணப்பங்களுள் உள்ளடக்கப்படாத மேலும் நிவாரணம் பெறுவதற்கு தகைமையுடையவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என சமூக நலன்புரி இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் மிலான் ஜயதிலக்க எம்.பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

04

## நிலக்கரி ஏற்றிய 07 கப்பல்கள் இன்று முதல் இலங்கை வருகை

நுரைச்சோலையிலிருந்து தொடர்ந்தும் மின்சாரம்

நிலக்கரியை ஏற்றிய ஏழு கப்பல்கள் இலங்கையை வந்தடையும். அதன்படி இன்று 06ஆம் திகதி முதலாவது கப்பல் வருவதுடன் 07,13, 20, 23, 27,31, ஆகிய தினங்களில் 60,000 மெற்றிக் தொன் நிலக்கரியை ஏற்றிய கப்பல்கள் நாட்டுக்கு வரவுள்ளதாக நிலக்கரி நிறுவனத் தலைவர் செஹான் சுமனசேக்கர கடந்த 04 ஆம் திகதி தெரிவித்தார்.

இந்த நிலக்கரி கப்பல்கள் புத்தளம் துறைமுகத்தில் நிலக்கரியை இறக்கும். பின்னர் அங்கிருந்து நிலக்கரி நுரைச்சோலை அனல் மின் நிலையத்துக்கு கொண்டு செல்லப்படும். யார் என்ன கூறினாலும் நுரைசோலை அனல் மின் நிலையத்துக்கு தேவையான நிலக்கரியை தட்டுப்பாடின்றி பெற்றுக் கொடுக்க முடியுமெனவும் அதன்படி நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திலிருந்து மின்சாரத்தை வழங்க முடியுமென நிலக்கரி நிறுவன தலைவர் குறிப்பிட்டார்.

தற்போது கடன் பத்திரத்தை வெளியிடுவதில் இந்நாட்டுக்கு பிரச்சினை உள்ளதால் தான் விநியோகம் செய்பவர்களுடன் நிலக்கரியை கப்பலுக்கு ஏற்றும் வேளையில் மொத்த பணத்தில் நூற்றுக்கு முப்பது வீதத்தையும் கப்பலில் இருந்து இறக்கும்போது எஞ்சிய



நூற்றுக்கு எழுபது வீதத்தையும் செலுத்துவது என்ற அடிப்படை ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளதாக குறிப்பிட்ட தலைவர் தற்போது கொண்டுவரப்படும் அனைத்து நிலக்கரி கப்பல்களுக்கும் நூற்றுக்கு 30 வீத பணம் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி

## அரசியல் குழு கூட்டம், 08ஆம் திகதி ஹற்றனில்

தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் குழு கூட்டம், நாளை மறுதினம் 08ஆம் திகதி ஞாயிறன்று நண்பகல் 12.30 மணிக்கு ஹற்றன் கிருஷ்ண பவன் விடுதியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி தேர்தல்களை எதிர்கொள்வது தொடர்பிலும், நடப்பு அரசியல் நிலவரங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படுமென கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல்:

## சௌமிய பவனில் கலந்துரையாடல்

உள்ளூராட்சிமன்ற தேர்தல் குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்ட உறுப்பினர்களுடன் கட்சியின் தலைமையகமான சௌமியபவனில் நேற்று கலந்துரையாடல் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் ஒவ்வொரு மாகாணங்களிலும், மாவட்டங்களிலும் உள்ள வேட்பாளர்கள் தாங்கள் போட்டியிட உள்ள எல்லைக்கு உட்பட்ட வட்டாரங்களில் தேர்தலை சந்திக்க தயாராக உள்ளதாக மாவட்ட பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மேலும் தேர்தலில் தனித்து போட்டியிடுவதா அல்லது கூட்டணியாக போட்டியிடுவதா என்பது தொடர்பாக பல கோணங்களில் ஆராயப்பட்டது.

04


National Lotteries Board
புதன்கிழமை 2023.01.04
www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 4990 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,045,167.00
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 3 9 5 7 5 5

தன நிதானய — 1020 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 140,877,983.20
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 14 42 66 76

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3232 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,164,761.20
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 13 16 49 55

ஹந்தஹன — சீட்டிழுப்பு இலக்கம் 299 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,606,142.00
வெற்றி இலக்கங்கள் 10 22 42 54

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1338 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 291,057,042.00
C 07 — 08 46 52 59
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1445 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,088,171.20
வெற்றி இலக்கங்கள் 2 7 4 1 6 5

## 24,000 கிலோ தோடம்பழங்கள்...

அதன் பிரகாரம் மூன்று கொள்கலன்களிலுமுள்ள தோடம்பழங்கள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவால் துறைமுகத்தில் வைத்து சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் கையளிக்கப்பட்டது.

இத் தோடம்பழங்களை கொழும்பு தேசிய வைத்தியசாலை, ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை, மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை உள்ளிட்ட அறுபது வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்க திட்டமிட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவமனை பணிப்பாளர் டாக்டர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

ஒரு கொள்கலனில் 24,000 கிலோ தோடம்பழங்கள் காணப்படுவதோடு துறைமுக அதிகார சபைக்குரிய ஜய இறங்குத்துறையில் இறக்கப்பட்ட இவ்வாறான இரண்டு கொள்கலன்கள் துறைமுக கப்பல்துறை விமான சேவைகள் அமைச்சர் மற்றும் துறைமுக அதிகார சபை தலைவர் கீர்த்தி பெர்னாட் ஆகியோரால் சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

கொழும்பு சர்வதேச முனைய நிறுவன (CICT) தளத்தில் இறக்கப்பட்ட இவ்வாறான இன்னுமொரு கொள்கலன் அதன் பொது முகாமையாளர் தலைமையில் சுகாதார அமைச்சருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதன் மூலம் மூன்று கொள்கலன்களிலும் 72,000 கிலோ தோடம்பழங்கள் காணப்பட்டதோடு அவற்றின் பெறுமதி 72 மில்லியனாகும். (ஒரு கிலோவின் சந்தை பெறுமதி 1,000 ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது) இவற்றை வைத்தியசாலைகளுக்கு இலவசமாக வழங்குவதால் நிதி அமைச்சர் குறிப்பிட்ட சுங்க வரியை விலக்கியுள்ளதோடு இலங்கை துறைமுக அதிகார சபை இறங்குத்துறை தளகட்டணமின்றி பொருட்களை விடுவிக்க முடிவு செய்துள்ளது. இந்நிகழ்வில் இலங்கை சுங்கம், இலங்கை துறைமுக அதிகார சபை, துறைமுக , கடற்றொழில் மற்றும் விமான சேவைகள் அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## நாட்டின் இறையாண்மையை பாதுகாக்க...

நோக்கமாக இருக்க வேண்டும். புலம்பெயர்ந்தோரின் அரசியல் பிரச்சினைகளைக் கையாள்வதற்காக இலங்கையில் புலம்பெயர்ந்தோர் அலுவலகம் ஒன்றை நிறுவுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.அதில்அவர்களின்பிரச்சினைகள் குறித்து ஆராய முடியும்.

2030 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் வெளியுறவுக் கொள்கை மற்றும் வெளிநாட்டு சேவை தொடர்பான வரைவை வெளிவிவகார அமைச்சு தயாரித்து வருகிறது. அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தையும் பாராளுமன்றத்தின் ஒப்புதலையும் பெற எதிர்பார்க்கப்படுகிறது.

வர்த்தகத் திணைக்களத்துக்குப் பதிலாக சர்வதேச வர்த்தக அலுவலகம் ஒன்றை இலங்கையில் நிறுவுவதற்கு நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். இது பல துறைகளில் காணப்படும் வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து நமது பொருளாதாரத்துக்கு பலன்களை பெற்றுத்தரும். எனவே, இந்த செயல்பாட்டில் சர்வதேச வர்த்தக அலுவலகம் முக்கிய பங்கு வகிக்கும் என்று நான் நம்புகிறேன்.

சம்பந்தப்பட்ட நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்துவது, முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிப்பது, சுற்றுலாவை மேம்படுத்துவது, விவசாய வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்துவது, பயிற்சிக்கான இடம்பெயர்வு, கல்வி மற்றும் கடல்சார் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது குறித்தும் இதன்போது ஜனாதிபதி கருத்து தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவுக்கான இலங்கையின் புதிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் சித்ராங்கனி வாகேஸ்வர, பிரான்ஸுக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட மனீஷா குணசேக்கர, பஹ்றைனுக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட எச்.எம்.ஜி.ஆர்.கே. விஜேரத்ன மெண்டிஸ், வியட்நாம் தூதுவராக நியமிக்கப்பட்ட கலாநிதி ஏ.எஸ்.யு. மெண்டிஸ், ஜேர்மனிக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள வருணி முத்துக்குமாரண, லெபனானுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள கபில ஜயவீர, இஸ்ரேலுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள எம்.எச்.எம். என். பண்டார, எத்தியோப்பியாவின் தூதுவராக நியமிக்கப்பட்ட கே.கே.டி. குமாரசிறி, ஜோர்தானுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள பிரியங்கிகா விஜேகுணசேக்கர, பிலிப்பைன்ஸிற்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி சானக எச். தல்பஹேவா, ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள உதய இந்திரரத்ன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, சர்வதேச உறவுகள் தொடர்பான ஜனாதிபதியின் பணிப்பாளர் தினுக் கொழம்பகே, நிலைபேரான அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் பணிப்பாளர் ரந்துல அபேவீர உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## முஸ்லிம் தரப்பையும் இணைத்துக்கொள்ள...

எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன் இந்த பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக விசமத்தனமான பிரசாரங்கள் முஸ்லிம் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுவது கவலைக்குரிய விடயமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் உரையாற்றிய ரவூப் ஹக்கீம் எம்பி: அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாகவும் நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் கட்சிகளுடனும் குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்புடனும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருப்பது வரவேற்கத்தக்கது.

எனினும் அது சம்பந்தமாக விசமத்தனமான பிரசாரங்கள் முஸ்லிம் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து, தமிழ் மக்களின் அபிலாசைகள் என்பது சில சமயங்களில் முஸ்லிம்களின் அபிலாசைகளுடன் முரண்பட்டதாக காணப்படுகின்றன. அந்த வகையில் தேவையற்ற சந்தேகங்களை கிளப்பி ஒட்டுமொத்த இனப்பிரச்சினை தீர்வுக்கான சாத்தியப்பாட்டையும் குழப்ப முயற்சிக்கும் விடயமாக இதை உணர முடிகிறது. அதனடிப்படையில் ஒட்டுமொத்த வடக்கு கிழக்கு பிரதேசத்தையும் ஒரு அரசியல் அலகாக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழர் தரப்பில் நீண்டகாலமாக தெரிவிக்கப்பட்டு வருகின்ற போதிலும் அதில் முஸ்லிம் தரப்பு சற்று மாற்றமான கருத்தை கொண்டிருக்கின்றது என்பதை குறிப்பிட வேண்டும் என தெரிவித்தார்.

## இந்திய எற்றுமதி, இறக்குமதிகளை...

தலைவர் இரத்தினலிங்கம் ஜெயசேகரன் நேற்று தெரிவித்தார். யாழ். வணிகர் கழகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தியாவுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான சரக்குக் கப்பல் சேவை இம் மாதம் இறுதியில் ஆரம்பிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்திருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகாலமாக வணிகர் கழகம் இச் சரக்குக் கப்பல் சேவையை கேட்டதன் தொடர்சியாக இந்திய இலங்கை அரசாங்கங்கள் தற்போது இணங்கி இந்த சேவையை முன்னெடுக்கவுள்ளனர்.வட மாகாணத்திலிருந்து தென்னை, பனை சார்ந்த உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியும். இதேவேளை இந்தியாவின் சந்தை நிலவரத்தை சரியாக அறிய வேண்டும். இந்திய வர்த்தக சங்கங்கள் கூடி கலந்துரையாடி அது சம்பந்தமான முன்னெடுப்புக்களை முன்னெடுக்க முடியும்.

★நீண்ட காலம் எதிர்பார்த்த இந்த நிகழ்வு தற்போதைய காலத்தில் நடைபெற இருக்கின்றது. அதை நாங்கள் இந்திய இலங்கை சங்கத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இதிலிருந்து முன்னேற வேண்டுமென வர்த்தகர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம் என்றும் இந்த சந்தர்ப்பத்தை தயவுசெய்து ஒவ்வொருவரும் பயன்படுத்தி கொள்ளுங்களென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

★தற்போதய அரசாங்கம் ஒரு சில பொருட்களுக்கான தடைகளை விதித்துள்ளது. தடை செய்யாத பொருட்களை இறக்குமதி செய்யலாம் அத்துடன் தடை செய்யாத பொருட்களுக்கான இறக்குமதி கட்டளைக்குரிய டொலர்களை அவர்கள் வங்கி மூலம் விடுகிறார்கள், தற்போது வந்திருக்கும் நடைமுறை தற்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக தலர்த்தப்பட்டு வருகின்றது. பொருட்களுக்கான தடைகள் நீக்கப்பட்டும் வருகின்றது.

★இந்திய ரூபாயிலும் இனிமேல் இறக்குமதி, ஏற்றுமதிகளை செய்யலாம் என்று பத்திரிகை மூலம் தகவல் வெளிவந்துள்ளது. இலங்கை வங்கி, இந்திய பணத்தின் மூலம் பரிமாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக வங்கி அதிகாரிகள் தெரிவித்து இருக்கிறார்கள். அதே போன்று இந்த ஏற்றுமதி இறக்குமதிலும் இந்திய ரூபாய் பயன்படுத்தலாமென தகவல் வழங்கப்பட்டது. இது சம்பந்தமாக வங்கி அதிகாரிகளுடன் அரசு அதிகாரியுடன் தொடர்பு கொண்டு இருக்கின்றோம். அதே நேரம் இந்திய ரூபாயிலும் ஏற்றுமதி இறக்குமதி செய்யலாம் என நினைப்பதாக தெரிவித்தார்.

## சமஷ்டி முறையிலான அர்த்தமுள்ள...

தெரிவித்த அவர், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண நீண்ட காலமாக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதும் அந்த யோசனைகள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என சபையில் சுட்டிக்காட்டினார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண புதிதாக திட்டங்களை வகுக்க வேண்டிய தேவை கிடையாது என்றும் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை செயற்படுத்துவதே அவசியமாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு நீண்ட பல வருடங்களாக கிடைக்காத தீர்வு எதிர்வரும் 75 ஆவது சுதந்திர தினத்திற்குள் இந்த குறுகிய காலத்திற்குள் கிடைக்குமா என பல்வேறு தரப்பினரும் கருத்துக்களை முன்வைத்து வரும் நிலையில் நாம் இதய சுத்தியுடன் பேச்சுவார்த்தைக்கு செல்கின்றோம்.

எனினும் இம்முறையும் அரசாங்கம் நாட்டு மக்களினதும் சர்வதேசத்தினதும் கண்களில் மண் தூவும் செயற்பாடுகளை மேற்கொள்ளுமானால் நியாயமான எமது பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொள்வதற்காக அனைத்து மக்களையும் இணைத்துக் கொண்டு போராட நேரிடும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறும் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே சுமந்திரன் எம்பி இவ்வாறு தெரிவித்தார்

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

தொடர்ந்தும் பேச்சு வார்த்தைகளில் நாம் ஏமாற்றப்பட்டு நம்பிக்கை இழந்துள்ளதால் இம்முறையும் பேச்சுவார்த்தையில் நம்பிக்கையில்லாமல்தான் கலந்து கொள்ளவுள்ளோம். அதனை அரசுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். அரசியல் தீர்வு காண பேச்சுவார்த்தையில் கூட்டமைப்பு பங்குகொள்ளவில்லை என்ற பழிச்சொல் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு வந்து விடக்கூடாது என்பதால் நாம் பேச்சுவார்த்தையில் பங்கேற்கிறோம். ஜனாதிபதியினாலேயே கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்திற்குள் தீர்வு காணப்பட வேண்டும் என நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். அந்த கால எல்லைக்குள் தீர்வை பெற்றுக் கொடுக்காவிட்டால் அதன் பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும். அரசியல் தீர்வு வழங்குவதாக குறிப்பிட்டு பேச்சுவார்த்தைகளை நடத்தி ஒரு நாடகத்தை அரங்கேற்றி தமிழர்களை ஏமாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் நாம் எமது அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள நேரும்.

பெப்ரவரி 04 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு காண்பதாக அரசு கூறி வரும் நிலையில் அந்த கால எல்லைக்குள் இனப் பிரச்சினைக்கான தீர்வை அரசாங்கம் வழங்காது எம்மையும் தமிழ் மக்களையும் ஏமாற்ற முயன்றால் மக்களை ஒன்று திரட்டி போராட்டங்களை முன்னெடுக்க நேரும்.இதனை ஒரு எச்சரிக்கையாக அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும். 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் தீர்வு காண்பதாக குறிப்பிட்டார். அந்த சந்தர்ப்பத்தில் சபையில் இருந்த அரசியல் கட்சித் தலைவர்களின் இணக்கத்தையும் அதன் போது அவர் பெற்றுக்கொண்டார்.

அந்த வகையில் கடந்த டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி சர்வக்கட்சி தலைவர்கள் கூட்டம் இடம்பெற்றது. அந்த கூட்டத்தில் அரசியல் தரப்பினர் பலரும் முற்போக்கான பல சிறந்த விடயங்களை முன்வைத்தனர். தமிழ் அரசியல் கைதிகளுக்கான விடுதலை, காணாமலாக்கப்பட்டோருக்கு நீதியான தீர்வு,

காணி விடுவிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்துரைத்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சவால்களிலிருந்து மீள அரசு...

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாழ்த்து தெரிவித்து உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் சபையில் தொடர்ந்தும் உரையாற்றுகையில்: பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்கு அமைய எதிர்வரும் வருடங்களை நாம் சாவல்களை வெற்றிகொள்ளும் வருடங்களாக மாற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

பல சவால்களை எதிர்கொண்டு ஒரு சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் உறுதிபூண வேண்டும். குறிப்பாக உணவுப் பாதுகாப்பு மற்றும் கிராமியப் பொருளாதார மறுமலர்ச்சிக்கு முன்னுரிமையளித்து ஏனைய சகல துறைகளினதும் முன்னேற்றத்துக்காக அனைவரும் தீவிரமாக செயல்பட வேண்டியது அவசியம். நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான உத்திகள் தயாரிக்கப்படுவதுடன் புத்தாண்டில் மகத்தான தேசமாக எழுச்சிபெற நாட்டுமக்கள் நம்பிக்கையுடன் கைகோர்த்து செயற்பட வேண்டும் என அரசாங்கத்தின் சார்பில் நாம் மீண்டும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

எமது நாடு 75வது சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கு ஒரு மாத காலமே உள்ளது. இலங்கையின் ஜனநாயகப் பாராளுமன்ற முறைமையைப் பாதுகாத்து சர்வஜன வாக்குரிமையானது

மக்களால் அவர்களின் விருப்பத்துக்கேற்ற வகையில் அரசாங்கங்களை தெரிவு செய்ய வழி வகுத்துள்ளது.

91 வருடங்களாக அனுபவித்துவரும் உலகின் சர்வஜன வாக்குரிமையை மேலும் பலப்படுத்த சகல பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியம்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் ஊடாக நாட்டு மக்களினதும் சர்வதேசத்தினதும் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அத்துடன் விமர்சனங்களுக்கு இடமளித்து விமர்சனங்களை ஆராய்ந்து ஜனநாயக சமூகம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. விசேடமாக பொருளாதார சிக்கல்கள் காணப்பட்ட ஜூலை மாதத்தில் காணப்பட்ட நிலைமைகள் மாற்றப்பட்டு இன்று மக்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்கு விரிவான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள சுமை போன்ற சவால்களிலிருந்து மீள்வதற்கு அரசாங்கம் தீர்வுகளைக் காணும் என்ற நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

21வது அரசியலமைப்பின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

அதனை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளை உருவாக்குவது தொடர்பாக அரசியலமைப்பின்படி செயற்படுவதற்கு அனைத்துக் கட்சிகளும் இணக்கத்துடனும் அர்ப்பணிப்புடனும் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்தாண்டில்......

தெரிவித்தார். இந்திய கடன் திட்டத்தின் கீழ் கிடைத்துள்ள 75 புதிய பஸ் வண்டிகளை நாடு முழுவதுமுள்ள டிப்போக்களுக்கு வழங்கும் நிகழ்வில் அமைச்சர் கலந்துகொண்ட போதே இவ்வாறு தெரிவித்தார். பத்தரமுல்லயிலுள்ள ஜப்பான் நட்புறவு பாதையில் நடைபெற்ற இந் நிகழ்வின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய தினம் போக்குவரத்து துறையில் மிக முக்கியமான தினமாகும். கிராமிய பிரதேச பாதைகளின் நிலைமைக்கு பொருத்தமான வகையில் உற்பத்தி செய்யப்பட்ட 75 நவீன பஸ் வண்டிகள் எமது போக்குவரத்து தொகுதியில் இணைக்கப்படுகின்றன. இந்திய அரசின் ஒத்துழைப்புடன் இந்திய கடன் யோசனை திட்டத்தின் கீழ் 100 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த பஸ் வண்டியை இலங்கைக்கு பெற்றுக் கொடுத்துள்ளது. நாட்டின் 75ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி தலைமையில் இந்தத் திட்டத்தின் கீழ் இந்நாட்டிற்கு கிடைக்கும் மேலும் பல பஸ் வண்டிகள் நாடு முழுவதுமுள்ள டிப்போக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட அனைத்து பிரதேசங்களையும் பிரதிநிதித்துவம்படுத்தும் வகையில் டிப்போக்களுக்கு இந்த பஸ் வண்டிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டிற்குள் 500 பஸ் வண்டிகளை பொது போக்குவரத்துக்காக இணைத்துக் கொள்ள நாம் திட்டமிட்டுள்ளோம். இந்திய அரசை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, பெருந்தெருக்கள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத், இராஜாங்க அமைச்சர்களான சிவனேசத்துரை சந்திரகாந்தன், சாந்த பண்டார, திலும் அமுனுகம ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

## பூஸ்டர் தடுப்பூசியாக.... (03 ஆம் பக்கத் தொடர்)

கட்டுப்படுத்த முடியாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, சுகாதார அதிகாரிகள் பரிந்துரை செய்யும் வகையில் பூஸ்டர் தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்வது பொருத்தமானதென அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் 8.2 மில்லியன் மக்கள் மட்டுமே பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 2,02,571 பேர் மட்டும் இரண்டாவது பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக் கொண்டுள்ளனர். இலங்கையில் பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒத்துழைப்புகளை... (03 ஆம் பக்கத் தொடர்)

உயர் ஸ்தானிகர் ஸ்டீபன்ஸ் உறுதியளித்தார்.

இக்கலந்துரையாடலில் முதலாம் செயலாளர் ஷானன் மேர்னி மற்றும் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## மத நல்லிணக்கத்தை... (03 ஆம் பக்கத் தொடர்)

அனைத்து மதங்களுமே தனது மதங்களை மதித்து செயல்படுவதுடன் அனைத்து மதங்களும் அஹிம்சை வழியையே போதிக்கின்றன. அந்த வகையில் மத நல்லிணக்கத்தை சிதைக்கும் வகையில் சமூக வலைத்தளங்கள் மூலம் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட எவரும் அதற்கு இடம் அளிக்கப்போவதில்லை.

## இலங்கையருக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவரமைப்பு, உள்நாட்டில் ஆட்சேர்ப்பு செயன்முறையை மேற்கொள்ளவுள்ளது.

வொஷிங்டன் டி.சி.யிலுள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரமைப்புடன் இணைந்து, அமெரிக்காவிலுள்ள இலங்கையருக்கான சட்டப்பூர்வ வேலை வாய்ப்புக்களைப் பாதுகாப்பதற்கான மேலதிக வழிகளை தற்போது ஆராய்ந்து வருகின்றது.

## 40,000 சிறுவர்களை... (03 ஆம் பக்கத் தொடர்)

மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது தொடர்பாக விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு உதவுவதற்கு பல நிறுவனங்கள் முன்வந்துள்ளன. ஒரு நிறுவனம் ஆயிரம் சிறுவர்களை பொறுப்பேற்பதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி பிரேமதாசவின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் தாய்மாருக்கான திட்டம் போன்றதொரு திட்டமே நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. அந்த வகையில் 12 பில்லியன் ரூபா நிதி திரிபோச விநியோக வேலைத் திட்டத்திற்காக கிடைத்துள்ளது. இந்த வேலைத் திட்டம் தற்காலிக பின்னடைவை கண்டுள்ள நிலையில் அதனை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

21,000 சிறுவர்களை உள்ளடக்கியதாக போசனைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டாலும் கொரோனா பாதிப்புக்கு பின்னர் நாட்டில் தற்போது 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் உள்ளனர். அவர்களுக்காக விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது.

அவர்களுக்கு நேரடியாக நிதி வழங்க முடியாது. அவ்வாறு வழங்கப்பட்டால் அவர்களது பெற்றோர்கள் அதனை மதுவுக்காக செலவழிக்கலாம். வேறு விதமாக அந்த போசனைத் திட்டம் முன்னெடுக்கப்படும்.

ஒரு சிறுவனுக்காக ஒரு வருடத்திற்கு 14,000 ரூபாய் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது எனினும் ஒரு வீட்டில் அவ்வாறு மூன்று சிறுவர்கள் காணப்பட்டால் அவ்வாறு வழங்குவது கடினமாக அமையலாம். எனவே அது தொடர்பில் மாற்று தீர்மானங்கள் மேற்கொள்ள வேண்டி நேரும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## தகுதியானவர்கள் தொடர்பில்... (03 ஆம் பக்கத் தொடர்)

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

பொருளாதார நெருக்கடியில் உள்ள குடும்பங்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்காக அரசாங்கம் சிறந்த திட்டங்களை முன்னெடுத்துள்ளது. எவ்வாறாயினும் பொருளாதாரம் சிறந்த நிலையில் உள்ள பலரும் சமுர்த்தி கொடுப்பனவுகளை பெற்று வருவது தெரியவருகிறது.

அரசாங்கத்தின் நிவாரணம் வழங்கும் புதிய செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது முன்னர் நடைமுறையிலிருந்த பட்டியல் இரத்தாகும்.

அதேவேளை, நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளும் காத்திருப்பு பட்டியலில் உள்ள அங்கவீனர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டில் 18 இலட்சம் பேர் சமுர்த்தி உதவியைப் பெற்று வருகின்றனர். அதில் சிறப்பாக வேலை செய்யக் கூடியவர்களும் உள்ளடங்குகின்றனர். அவ்வாறானவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதேவேளை, விசேட தேவையுடையவர்கள் கல்வி கற்பதற்கான பாடசாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு பல்கலைக் கழகம் வரை கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சௌமிய பவனில்... (03 ஆம் பக்கத் தொடர்)

இறுதி தீர்மானம் இம்மாதம் 17 ஆம் திகதி அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. தேர்தல் குழு, வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான குழு,பிரசார குழு என மூன்று குழுக்கள் இதன் போது நியமிக்கப்பட்டுள்ளன.

## உள்ளூராட்சி சபை தேர்தலை தடுக்க...

அது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 25 சதவீத இளைஞர் பிரதிநிதித்துவ தேர்தல் திருத்த முறைமை தொடர்பான தனிப்பட்ட பிரேரணை தொடர்பில் எவரும் குழப்பமடையத் தேவையில்லை.

பாராளுமன்றத்தில் தனிப்பட்ட பிரேரணை முன்வைக்கப்பட்டால் அதை நிறைவேற்றுவதற்கு குறைந்தது ஆறு மாத காலமாவது தேவைப்படும். தனிப்பட்ட பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்படும் போது அது தொடர்பில் அமைச்சரவை ஆலோசனைக் குழுவில் ஆராயப்படும்.

எவராவது விரும்பினால் குறிப்பிட்ட சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தின் சவாலுக்குட்படுத்த 14 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படும். அந்த வகையில் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் மூன்று வார காலத்திற்குள் வியாக்கியானத்தை அறிவிக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தனிப்பட்ட பிரேரணையொன்று சட்டமாவதற்கு குறைந்தது இரண்டரை மாதங்களேனும் செல்லும்.

ஆகவே 25 சதவீத இளைஞர் பிரதிநிதித்துவ சட்டமூலம் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு தாக்கம் செலுத்தாது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அரசியலமைப்பினால் உரித்தாக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

## தனித்தனியாக போட்டியிடுவது...

தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,,, எந்தத் தேர்தலையும் நாங்கள் சந்திக்க தயாராக இருக்கிறோம். அந்த வகையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள தேர்தலையும் நாங்கள் சந்திக்க வேண்டும். எனினும் தேர்தல் முறையை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த முறையானது மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆளுகின்ற முறை அல்ல. மக்களுடைய எண்ணங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. அந்த வகையில் தேர்தல் முறை மாற்றப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக உள்ளது. உள்ளூராட்சிசபைத் தேர்தலை ஒற்றுமையாக சந்திக்க வேண்டும் என்பதே எமது நோக்கம். இத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக போட்டியிட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. கூட்டமைப்பு தனித்தனியாக போட்டியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக போட்டியிட வேண்டும்.தேர்தலுக்கான அமைப்பாக தமிழ் தேசியக்கூட்டமைப்பு இல்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் முன்வைத்த கோரிக்கை மட்டக்களப்பில் இடம்பெற இருக்கும் தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றேன். எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு பின் நாங்கள் என்ன செய்வது என்ற நிலைப்பாட்டை தெரிவித்துக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## லிற்றோ சமையல் எரிவாயு...

அத்துடன் 05 கிலோ லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 80 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 1,770 ரூபா என நிறுவனம் அறிவித்துள்ளது.

## அனைத்து தமிழ் கட்சிகளும்...

ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன். வடக்கு ஒருங்கிணைப்புக்குழு ஏற்பாடு செய்த இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது மேற்குறிப்பிட்ட விடயங்கள் வலியுறுத்தப்பட்டன. வடக்கில் மன்னார், வவுனியா நெடுங்கேணி. யாழ், நாவற்குழி, கிளிநொச்சி, அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் மற்றும் திருகோணமலை நகரிலும் இக்கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஸ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் இணைய வலியுறுத்தியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இஸ்லாம் போதிக்கும் பன்மைத்துவம்

ஒரு பிரதேசத்திலோ, நாட்டிலோ உள்ள சமூகமானது இனத்தாலோ, மதத்தாலோ, மொழியாலோ வேறுபட்ட மக்களைக் கொண்டிருப்பின் அதனை பன்மைத்துவ சமூகம் எனக் குறிப்பிடலாம். பன்மைத்துவம் இயற்கையானது, யதார்த்தமானது. இதனை அல் குர்ஆன் பின்வருமாறு விபரிக்கின்றது, **'உங்களில் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் ஒவ்வொரு மார்க்கத்தையும், வழிமுறையையும், ஏற்படுத்தியுள்ளோம். அல்லாஹ் நாடினால் உங்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருக்கலாம். ஆனால் அவன் உங்களுக்குக் கொடுப்பதைக் கொண்டு உங்களைச் சோதிப்பதற்காகவே இவ்வாறு செய்திருக்கிறான். எனவே நன்மையானவற்றின்பால் முந்திக் கொள்ளுங்கள்'**

**(சூறா அல் மாஇதா – 48)**

மேற்குறிப்பிடப்பட்ட வசனத்திலிருந்து பன்மைத்துவ சமூகம் என்பது அல்லாஹ்வின் திட்டமிடலாகும். அவன் நாடியிருப்பின் உலக மாந்தர்களனைவரையும் ஒரே இனத்தையும், மதத்தையும் சேர்ந்தவர்களாக ஆக்கியிருக்கலாம். என்றாலும் இவ்வுலகின் சீரான இயக்கத்திற்கும், சமநிலையான போக்கிற்காகவுமே பல்லின சமூக அமைப்பை தோற்றுவித்துள்ளான் என்பது தெளிவாகின்றது.

இதன் மூலம் பன்மைத்துவம் என்பது தவிர்க்கமுடியாத நம் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள சமூக அமைப்பியலாகும். பல்லின மக்கள் வாழும் சமூக அமைப்பொன்றில் குறிப்பிட்ட ஒரு சமூகம் பெரும்பான்மையாக இருப்பதோடு ஏனைய சமூகங்கள் சிறுபான்மையாக இருப்பதே நியதியாகும். பன்மைத்துவம் என்பது தனி மனித வாழ்க்கையிலும் கூட்டு வாழ்க்கையிலும் பரஸ்பரக் கலந்துரையாடலை ஏற்படுத்திக் கொள்வதாகும். மனிதர்களின் கூட்டுப்பண்பே சமூக நல்லிணக்கத்தின் அடிப்படை எண்ணக்கருவாக அமைகிறது. அந்தவகையில் பன்மைத்துவ சமூகத்துடனான உறவு குறித்து அல் குர்ஆன் மற்றும் சுன்னா பலமான அடித்தளங்களை இட்டுள்ளன.

ஒவ்வொரு இனத்திற்கும் தனித்துவமான கலாசார அம்சங்களும், பழக்கவழக்கங்களும் உள்ளன. அத்தனித்துவங்களே அவ்வினத்தை அடையாளப்படுத்துகின்றன. ஒவ்வொரு இனமும் தத்தமது இருப்பை ஸ்திரப்படுத்திக்கொள்ளவும், தம்மை அடையாளப்படுத்தும் தனித்துவங்களை காத்துக்கொள்ளவும் முயற்சிக்கின்றன. அவற்றுக்கெதிரான சவால்கள் தோன்றுகையில் அதற்கெதிராக குரல் கொடுப்பதோடு அது போராகவும் உருப்பெறுகின்றது. இவ்வாறான சமூக அமைப்பொன்றில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது தொடர்பாக அல்குர்ஆனிலும் நபி (ஸல்) அவர்களது போதனைகளிலும் முழு மனித சமூகத்திற்கும் வழிகாட்டுதல்கள் உள்ளன.

அல்லாஹ்வின் படைப்புகளில் உள்ள ஒழுங்கமைப்பை இப்பிரபஞ்சம் பறைசாற்றுகின்றது. **'(நபியே) நிச்சயமாக அல்லாஹ் வானத்திலிருந்து மழையை இறக்கிவைக்கின்றான் என்பதை நீர் பார்க்கவில்லையா? பின்னர் நாம்தான் அதனைக்கொண்டு அவற்றின் நிறங்கள் மாறுபட்டவையான கனிகளை வெளியாக்கினோம். இன்னும் மலைகளிலிருந்து அதன் நிறங்கள் மாறுபட்டவையான வெள்ளையும் சிவப்புமான பாதைகளும் உள்ளன. இன்னும் அவ்வாறே மனிதர்களிலும், பூமியில் ஊர்ந்து திரிபவற்றிலும், கால்நடைகளிலும் நிறங்கள் வேறுபட்டுக் காணப்படுகின்றன.' (சூரா அல் பாதிர் 27,28)**

அல்லாஹ் ஒரே மூலக்கூறிலிருந்து மனித இனத்தை படைத்து பரவச் செய்தாலும், அவர்களுக்கு மத்தியில் நிற, மொழி, இன வேறுபாடுகளை அவனது அத்தாட்சியாக ஏற்படுத்தியதாக குறிப்பிடுகின்றான். மேலும் இவ்வேறுபாடுகளின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் பரஸ்பர அறிமுகத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காகவே அவர்களை கோத்திரங்களாகவும், கிளைகளாகவும் படைத்துள்ளதாக அல்குர்ஆன் பறைசாற்றுகின்றது.

அல்லாஹ்வால் படைக்கப்பட்ட அனைத்துப் படைப்புக்களும் 'பன்மைத்துவம்' என்ற ஓர் அழகிய அடையாளத்தால் அலங்கரிக்கப்பட்டே காணப்படுகிறது. பல்வேறு வர்ணங்கள், தோற்றங்கள், தன்மைகள், பண்புகள், இயல்புகள், மொழி, பால், இனத்துவ வேறுபாடுகள், கலாசார, நாகரிக பண்பாட்டு பழக்கவழக்கங்கள், சிந்தனா சக்தி, ஆற்றல், ஆளுமை, காலநிலை, புவியியல் பிரிகை என எங்கும், எதிலும் பல்வகைமை எனும் கலைத்துவம் வியாபித்துக் காணப்படுகிறது. இதற்கு மனித இனமும் விதிவிலக்கன்று. இவை படைப்பினங்களுக்கு அருளாகவும் இப்பிரபஞ்சத்தின் முறையான இயங்குநிலைக்கான அடிப்படையாகவும் கணிக்கப்படுகின்றது.

பன்மைத்துவத்தினை உள்வாங்கி தேசிய அடையாளத்தை வெளிப்படுத்தும் போது அங்கே மனிதம் மிளிர்வதனைக் காணலாம், பல்லினத்துவம் குறித்த இஸ்லாத்தின் கோட்பாடுகளும், நபி (ஸல்) அவர்களது வழிகாட்டல்களும் வினைத்திறன்மிக்கவை. மனித இனத்துவ பல்வகைமையின் யதார்த்தத்தை அல்லாஹ் இவ்வுலகை முறையே இயங்கச் செய்கின்ற இயங்கு சக்தியாக அமைத்து வைத்துள்ளான். மனிதன் உலகின் ஒற்றைத் தன்மையை விரும்பாத இயல்புடையவனாக காணப்படுகின்றான். சுவர்க்கத்திலிருந்து வந்த உணவாக இருந்தபோதிலும் அதனைத் தொடர்ந்து உண்பதில் மூஸா (அலை) அவர்களின் கூட்டத்தினர் சலிப்படைந்தமையை அல்குர்ஆன் இவ்வாறு சுட்டிக்காட்டுகின்றது.

**'நீங்கள் மூஸாவை நோக்கி இவ்வாறு கூறியதை நினைவு கூறுங்கள். மூஸாவே ஒரே வகையான உணவைச் சாப்பிடுவதில் எம்மால் பொறுமையைக் கடைப்பிடிக்க முடியாது. எனவே பூமி விளைவிக்கின்ற கீரை, வெள்ளரிக்காய், கோதுமை, பூண்டு, பருப்பு, வெங்காயம் ஆகிய பொருட்களை எங்களுக்கு உற்பத்தி செய்து தரும்படி உமது இறைவனைப் பிரார்த்திப்பீராக. அதற்கு மூஸா சிறந்த பொருட்களுக்குப் பதிலாக தரம் குறைந்த பொருட்களையா விரும்புகிறீர்கள்? அப்படியாயின் நீங்கள் வேண்டுபவை எல்லாம் உங்களுக்குக் கிடைக்கும் எனக் கூறினார். (சூரா பகரா – 61)**

மனிதர்கள் இனங்களாக, குழுமங்களாக, கோத்திரங்களாக வாழ்வது தவிர்க்க முடியாத இயல்பாகும். எனினும் அது மனிதனாக கூடி வாழ்வதற்கு ஒரு போதும் தடையானதன்று. அது மனித ஐக்கியத்திற்கு ஏற்புடைய பலமான காரணியாகும். அதாவது, ஒரு ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைக்கப்பட்ட மனிதர்கள், தங்களிடையே காணப்படுகின்ற இரத்த உறவைப் பேணி இணைந்து வாழ்வதில் தமக்கிடையே காணப்படுகின்ற குல மரபுப் பேதங்கள் துணை செய்கின்றன.

பிற சமூகங்களின் உறவு என்பது அல் குர்ஆனின் பேசுபொருள்களில் ஒன்றாகும். நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான அடிப்படைகளை அது உலகின் யதார்த்தம் என்ற வகையில் தெளிவாக முன்வைக்கின்றது. இஸ்லாத்தின் பிரதான மூலாதாரமாக அர்குர்ஆனை ஆழ்ந்து கற்கும் போது அது சமாதானத்தினதும், சக வாழ்வினதும் மார்க்கம் என்பதை இலகுவில் புரிந்து கொள்ள முடியும். யுத்தத்தைக் குறிக்கும் 'ஹர்' எனும் சொல் அல்குர்ஆனில் ஆறு இடங்களிலும், சமாதானத்தைக் குறிக்கும் 'சில்ம்' எனும் சொல்லும் அதிலிருந்து பிரிந்த சொற்களும் சுமார் 100 இடங்களிலும் இடம்பெற்றுள்ளன. இஸ்லாம் அடிப்படையிலேயே சமாதானத்தின் மார்க்கம் என்பதையே அல்குர்ஆன் வலியுறுத்துகின்றது. நபி (ஸல்) அவர்களின் வாழ்வியலும் இக்கருத்தையே பிரதிபலிக்கிறது. மதம், இனம், மொழி, கலாசாரம், நாடு ஆகிய எல்லைகளைக் கடந்து அனைவரும் மனிதர்களாக வாழ்வதற்கு இஸ்லாம் தூண்டுதல் அளிக்கின்றது.

பிற சமூகங்களுடன் வாழும் போது முரண்பாடுகளைத் தவிர்த்து இணக்கமாக சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்ளுமாறு இஸ்லாம் முஸ்லிம்களைப் பணித்திருக்கின்றது. அதற்கப்பால் நன்மையான விடயங்களில் பரஸ்பரத்துடன் ஒத்துழைக்குமாறு அல்குர்ஆன் மனிதகுலத்தை அழைக்கின்றது, அத்துடன் உதவுதல், ஒத்துழைத்தல், விட்டுக்கொடுத்தல் என்பன நல்லிணக்கத்திற்கு இஸ்லாம் கற்றுத்தந்துள்ள விழுமியங்களாகும். இவ்வடிப்படைகள் தவிர மனித சமத்துவம், கருத்துச் சுதந்திரம், தங்கி வாழுதல், சார்ந்திருத்தல், கலந்து வாழுதல், சமூக நீதி, கருத்துச் சுதந்திரம் என இன்னும் பல உயர்ந்த விழுமியங்களையும் நல்லிணக்கத்தின் வேர்களாக குர்ஆன் முன்வைப்பதையும் மறந்து விடலாகாது.

கலாநிதி, அல்ஹாபிழ்
எம்.ஐ.எம். சித்தீக்...
(அல்ஈன்ஆமி)
B.A.Hons,(Al Azhar university, Egypt) M.A.&
PhD (International Islamic university, Malaysia)

# நற்பண்புகளால் எமக்கு வந்துசேரும் உயர் அந்தஸ்து

மனித சமுதாயத்திற்கு நற்பண்புகளைக் கற்றுத்தரும் இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்புகள் குறித்து தங்களது தோழர்களிடமும், தங்களை சந்திக்க வருபவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் அடிக்கடி எடுத்துரைப்பதுண்டு.

'பிறரிடம் சொல்லாலும், செயலாலும் அழகிய நற்பண்புகளை பொழிய வேண்டும். நாவின் மூலம் பிறருக்கு நோவினை செய்பவன் முஸ்லிமில்லை' என தம் தோழர்களிடம் நபி (ஸல்) அவர்கள் அவ்வப்போது கூறக்கூடிய நற்செய்தியாக இருந்தது. அதே போன்று பொறுமை குறித்தும் நபி(ஸல்) அவர்கள் அடிக்கடி வலியுறுத்தியுள்ளார்கள்.

இது தொடர்பில் நபி(ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது, 'பொறுமை என்றால் மூன்று நிலைகளில் இருக்க வேண்டும். அதில் முதலாவது இறைவனை வணங்குவதில் என்ன சிரமங்கள் இருப்பினும் அதை செய்து முடிக்க வேண்டும். வேலைப்பளு, சோம்பேறித்தனம் போன்றவற்றால் பொறுமை இழந்து இறை வணக்கத்தை விட்டுவிடக் கூடாது. **'நம்பிக்கை கொண்டோரே! பொறுமையுடனும், தொழுகையுடனும் (இறைவனிடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கிறான்'** என்பது அல் குர்ஆனின் **(2:153)** வலியுறுத்தலாக இருந்து கொண்டிருக்கின்றது.

மேலும், பாவச் செயல்களில் பொறுமை காட்ட வேண்டும். அதாவது, எவ்வளவு தான் மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தாலும், அது பாவமான காரியம் என்றால், அதில் ஈடுபடுவதில் இருந்து பொறுமை காக்க வேண்டும். பொறுமையிழந்து அதை செய்துவிட்டால், கெட்ட பெயர் ஏற்பட்டுவிடும். பின்னர் அந்த அவப்பெயரை நீக்குவது கஷ்டமாகி விடும். நல்லவராக வேண்டும் என்றால் கடினமான உழைப்பு தேவை. ஆனால், தீயவனாக வேண்டும் என்றால் சிறு தவறு செய்தால் போதும். எனவே பாவங்களைச் செய்யாமல் பொறுமை காக்கத் தவறக்கூடாது.

'பாவம் செய்யும் ஒவ்வோர் ஆத்மாவும் தனக்கே, கேட்டைத் தேடிக்கொள்கிறது; ஓர் ஆத்மாவின் பாவச்சுமையை மற்றோர் ஆத்மா சுமக்காது' எனவும் அல் குர்ஆன் (6:164) எச்சரித்திருக்கின்றது. அதேநேரம் தங்களுக்கு சோதனை ஏற்படும் காலங்களில் மனிதர்கள் பொறுமை காக்க வேண்டும். நம் வாழ்வில் எத்தனை கஷ்டம் வந்தாலும், 'என்னைப் படைத்தவன் என்னை எப்படி நடத்த வேண்டும் என்று எண்ணி இருக்கிறானோ அப்படியே நடக்கும்' என்ற உறுதியான எண்ணம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும். அப்போதுதான் சோதனையிலும் சாதனை படைக்க முடியும்.

இதுகுறித்து அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது, 'பகலின் (காலை, மாலை ஆகிய) இருமுனைகளிலும், இரவின் பகுதியிலும் நீங்கள் தொழுகையை நிலைப்படுத்துவீராக. நிச்சயமாக நற்செயல்கள், தீச்செயல்களைப் போக்கிவிடும். (இறைவனை) நினைவு கூருவோருக்கு இது நல்லுபதேசமாக இருக்கும்' (11:114).

**'நபியே! எந்நிலையிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பீராக. நிச்சயமாக அல்லாஹ் அழகிய செயல்கள் செய்வோரின் கூலியை வீணாக்கி விடமாட்டான்'. (அல் குர்ஆன் 11:115).**

**'இறையச்சத்துடன் யார் நற்செயல்கள் செய்கிறார்களோ அவர்களை நிச்சயமாக அல்லாஹ் சுவனபதிகளிலே புகுத்துவான். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டே இருக்கும். அங்கே பொன்னாலான கடகங்களிலிருந்தும், முத்திலிருந்தும் ஆபரணங்கள் அணிவிக்கப்படுவார்கள். அங்கு அவர்களுடைய ஆடைகளும் பட்டாக இருக்கும்' (அல் குர்ஆன் 22:23).**

ஆகவே இம்மையிலும் மறுமையிலும் ஒரு மனிதன் உயர்ந்த நிலையை பெற வேண்டும் என்றால் அதற்கு உதவும் நற்பண்புகள் எவை? என்ன? என்பதை அறிந்து தெரிந்து அதன்படி வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும். அதன் ஊடாக அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடைந்து கொள்ளலாம்.

அபூ முஷீரா...

# கோள்மூட்டும் பழக்கத்தை தவிர்த்துக் கொள்வோம்!

மக்களிடையே குழப்பம் விளைவிப்பதற்காக ஒருவர் கூறியதை இன்னொருவரிடம் சொல்வதே கோள் ஆகும். கோள் சொல்லித் திரிவதை சிலர் தொழிலாகக் கொண்டுள்ளனர். இது மக்களிடையே விரோதத்தையும் குரோதத்தையும் மூட்டி விடுவதற்கும் அவர்களுக்கிடையே உள்ள நல்லுறவைத் துண்டிப்பதற்கும் மிகப் பெரிய காரணமாகும். இவ்வாறு செய்பவனை அல்லாஹ் இழித்துரைத்துள்ளான்:

**'அதிகமாக சத்தியம் செய்கின்ற அற்பமான எந்த மனிதனுக்கும் நீர் அடங்கி விடாதீர். அவன் குறைகூறி திரிபவனாகவும் கோள் சொல்லித் திரிபவனாகவும் இருக்கின்றான்'**

**(68:10,11)**

**'கோள்ச் சொல்லித் திரிபவன் சொர்க்கம் செல்ல மாட்டான்' என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.**

(ஆதாரம்: புஹாரி).

**ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், மதீனாவில் ஒரு தோட்டத்தின் பக்கமாகச் சென்று கொண்டிருந்த போது கப்றில் வேதனை செய்யப்படும் இரண்டு மனிதர்களின் சப்தத்தைச் செவியுற்றார்கள். அப்போது இவ்விருவரும் வேதனை செய்யப்படுகிறார்கள். (ஆனால்) அவர்கள் ஒரு பெரிய விஷயத்திற்காக வேதனை செய்யப்படவில்லை என்று கூறிவிட்டு, ஆம்! (இதைத் தொடர்ந்து வேறொரு அறிவிப்பில் 'அது பெரிய விஷயம் தான்' என்று வந்துள்ளது) அவ்விருவரில் ஒருவர் சிறுநீர் கழிக்கும் போது (சிறுநீர் துளி தன்னில் படாமல்) பேணுதலாக இருக்கவில்லை. மற்றொருவர் கோள் சொல்லித் திரிபவராக இருந்தார் என்று கூறியுள்ளார்கள்.**

(ஆதாரம் புஹாரி)

அதேநேரம் கோள் சொல்வதில் மிக மோசமானது கணவனைப் பற்றி மனைவியிடத்திலும், மனைவியைப் பற்றி கணவனிடத்திலும் குறை கூறித் திரிவதாகும். அவ்விருவருக்கிடையே உள்ள நல்லுறவைக் கெடுப்பதற்கான முயற்சியாகும் இது.

ஆகவே அல் குர்ஆனும் நபி (ஸல்) அவர்களும் வெறுத்துள்ள இச்செயலைத் தவிர்த்துக்கொள்வதில் அதிகூடிய கவனம் எடுத்துக்கொள்வோம்.

# இன்பமோ துன்பமோ இல்லாத வாழ்வு?

**நபி (ஸல்) அவர்கள் கூறியதாக சுஹைப் (ரழி) அவர்கள், 'ஒரு விசுவாசியின் நிலைமை விந்தையானது. அவன் எந்த நிலையில் இருந்தாலும் அது அவனுக்கு நன்மை அளிப்பதாக அமைந்து விடுகிறது. ஒரு விசுவாசியைத் தவிர வேறு எவருக்கும் இவ்வாறு அமைவதில்லை. இறை நம்பிக்கையாளருக்கு மகிழ்வும் மன நிறைவும் ஏற்பட்டு விட்டால் அவர் நன்றி செலுத்துகிறார். அது (நன்றியுடன் நடந்து கொள்வது) அவருக்கு நன்மையாக அமைகின்றன. அதேசமயம் அவருக்கு இழப்போ துன்பமோ ஏற்பட்டால் அவர் அதனைப் பொறுமையுடன் சகித்துக் கொள்கிறார். அதுவும் (பொறுமையுடன் நடந்து கொள்வதும்) அவருக்கு முழுக்க முழுக்க நன்மை பயப்பதாக அமைந்துவிடுகிறது என்று கூறியுள்ளார்கள்.** (ஆதாரம் முஸ்லிம்)

மனித வாழ்வில் இன்பங்களோ துன்பங்களோ இல்லாத வாழ்வு இல்லை. வாழ்வில் மகிழ்ச்சியும் திருப்தியும் மனநிறைவும் நிறைந்த நிலைமைகள் மாறிமாறி வரும், அதே சமயம் கஷ்டங்களும் இன்னல்களும் வேதனைகளும் சூழ்ந்து கொள்கின்ற சந்தர்ப்பங்களும் வரவே செய்யும். இது தான் உலக வாழவின் இயல்பு.

இறைநம்பிக்கையாளர்கள் இவ்விரு நிலைகளிலும் நன்மைகளைக் கொள்ளையடித்துக் கொள்வார்கள். அவர் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினாலும் தடுமாற மாட்டார்கள். மனம் நன்றியுணர்வால் நனைய அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவாறு நன்மைகளை ஈட்டிக்கொள்வார்.

துன்பப் புயலில் சிக்கி வாழ்க்கைத் தோனி தத்தளித்தாலும் கூட அவர் நொந்து போக மாட்டார். எல்லாம் அல்லாஹ்வின் நாட்டம் என்று கூறி அழகிய பொறுமையைக் காப்பார்.

இந்த இழப்பிலும் தமக்கு ஏதாவது நன்மை பொதிந்து இருக்கும் என்று எண்ணியவாறு தம்முடைய அதிபதியின் முடிவை மனமுவந்து ஏற்றுக்கொண்டு பொறுமையுடன் நடந்து கொள்வார். இந்த நன்றியுணர்வும் பொறுமையும் உண்மையில் வாழ்வின் மேன்மையான மிகவும் உயர்ந்த பண்புகளாகும். இந்த இரண்டு பண்புகளைக் தவிர்த்துவிட்டு உயர்வான மன நிம்மதியான நடத்தையை நாம் கற்பனை செய்து பார்க்க முடியாது.

**ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் கூறுகிறான் 'இறைநம்பிக்கை (ஈமான்) கொண்ட அடியானுக்கு மிகவும் நெருக்கமான மனிதரை உலகத்தாரிடமிருந்து நான் எடுத்துக்கொள்ளும் போது எனக்காக அந்த இறைநம்பிக்கையாளர் பொறுமையை மேற்கொள்கிறார் எனில், அவருக்கு நற்கூலியாக சுவர்க்கத்தை அளிப்பேன்' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.** (ஆதாரம்: புஹாரி)

மற்றொரு சந்தர்ப்பத்தில் **நபி (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் கூறுகிறான், 'ஆதமின் மகனே... துன்பம் நேரும் போது நீ தொடக்கத்திலேயே பொறுமையை மேற்கொள்வாய் எனில், என்னுடைய அன்பையும் நற்கூலியையும் புண்ணியத்தையும் பெறுவதை நோக்கமாகக் கொண்டிருப்பாயாயின், உனக்காக சுவனத்தை விடக் குறைவான வேறு எந்த நற்கூலியையும் அளிப்பதற்கு நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்' என்று கூறியுள்ளார்கள்.**

(ஆதாரம் இப்னு மாஜா)

எந்தவொரு துன்பம் ஏற்படும் போதும் தொடக்கததில் தான் அதன் பாதிப்பு மிகக் கடுமையாகவும் அதிகமாகவும் இருக்கம். சில நாட்கள் கழிந்து விட்ட பிறகு இயல்பாகவே துயரத்தின பாதிப்பு குறைந்துவிடும்.

அதனால் தான் துன்பம் நேரும் போது தொடக்கத்திலேயே மேற்கொள்ளப்படுகின்ற பொறுமைக்கான நற்கூலி இங்கு எடுத்தியம்பப்பட்டு இருக்கிறது. பொறுமையின் காரணமாக அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையில் தனித் தொடர்பு ஏற்பட்டு விடுகின்றது. அதனால் தனக்காகப் பொறுமையை கடைபிடித்த அடியானுக்கு மற்றெல்லாவற்றை விடவும் மிகப்பெரிய அருட்கொடையான சுவர்க்கத்தை அல்லாஹ் அளிக்காமல் இருப்பதில்லை.

தொகுப்பு:
மைஸரா அப்துல் காதிர்...

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 12

## குறள் தரும் சிந்தனை



செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று

*கீழ்மக்களின் நட்பு, பாதுகாப்பாக அமையாத தீயதன்மை கொண்டது என்பதனால், அவர்களுடன் நட்பு ஏற்படுவதைவிட, ஏற்படாமல் இருப்பதே நலம்.*

# உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு இன்றைய காலப்பகுதி உகந்ததா?

நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தலை நடத்துவதற்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் காலஎல்லையைத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இவ்வறிவிப்புக்கு அமைய எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட உள்ளன.

இதற்கேற்ப தேர்தலுக்கான கட்டுப்பணத்தை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகங்கள் மட்டத்தில் நேற்றுமுன்தினம் 04 ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளன. எதிர்வரும் 20 ஆம் திகதி வரை கட்டுப்பணம் ஏற்றுக்கொள்ளப்பட இருக்கிறது.

நாட்டில் 341 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. அவற்றில் காலி மாவட்டத்திலுள்ள எல்பிட்டி பிரதேச சபை தவிர்ந்த 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கே இவ்வாறு வேட்புமனுக்கள் கோரப்பட்டிருக்கின்றன. எல்பிட்டிய பிரதேச சபைக்கு 2019 இல் தேர்தல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டில் மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் என உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. இம்மன்றங்களுக்கு கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி இறுதியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடாத்தப்பட்டது. அத்தேர்தல் வட்டார மற்றும் விகிதாசார முறைகளை உள்ளடக்கிய கலப்பு முறைமையில் நடத்தப்பட்டது.

இதன் ஊடாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை முன்பை விடவும் பெரிதும் அதிகரித்தது. இது தொடர்பில் விமர்சனங்கள் நிலவி வருகின்றன. ஜனாதிபதி கூட இந்த எண்ணிக்கை அதிகம் என ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளார். அத்தோடு இத்தேர்தல் முறைமையில் காணப்படும் பலவீனங்கள் சீரமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவை இவ்வாறிருக்க, கடந்த வருடம் நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. இவ்வாறான பின்புலத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் 2023 மார்ச் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருக்கின்றது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களின் பயனாக தீவிர நிலையில் இருந்த பொருளாதார நெருக்கடி கட்டம் கட்டமாக வீழ்ச்சி அடைந்து வருகின்றது. ஆனாலும் இந்நெருக்கடி தோற்றம் பெறுவதற்கு முன்பிருந்த நிலையை நாடு இன்னும் அடையவில்லை. இருந்தும் கூட, இவை குறித்து கருத்தில் கொள்ளாத பிரதான எதிர்க்கட்சி உள்ளிட்ட சில அரசியல் கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு கோரிக்கை விடுத்து வந்தன. அதற்கேற்ப தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலுக்கான வேட்புமனுக்களை கோரியுள்ளது.

ஜனநாயகப் பாரம்பரியத்தின்படி உரிய காலப் பகுதியில் தேர்தல் நடாத்தப்பட வேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியானது தேர்தலொன்றை நடத்துவதற்கு தேவையான சூழலை வழங்கி இருப்பதாகத் தெரியவில்லை.

தேர்தலொன்றை நடாத்துவதற்கு அதிக நிதிச் செலவு ஏற்படும். அவ்வாறான செலவொன்றை மேற்கொண்டு தேர்தலை நடத்துவதற்கு ஏற்ற சூழல் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான நாட்டில் இன்னும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை என்பதுதான் பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும். தற்போதைய சூழலில் பெருந்தொகைப் பணத்தை செலவிட்டு தேர்தல் ஒன்று நடத்தப்படுமாயின் பொருளாதார நெருக்கடி மீண்டும் தீவிர நிலையை அடையக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

என்றாலும் பொருளாதார ரீதியில் நாடு நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள சூழலில் எதிர்க்கட்சிகள் இத்தேர்தலை நடத்துமாறு கோருவதன் நோக்கத்தை மக்கள் அறியாதவர்கள் அல்லர். ஆனால் நாடும் மக்களும் தற்போதைய சூழலில் எதிர் கொண்டுள்ள நிலைமையை முதலில் கருத்தில் கொள்ள வேண்டும். அந்நிலைமையில் இருந்து நாடும் மக்களும் மீட்சி பெற வேண்டும். இதன் நிமித்தம் அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கும் வேலைத்திட்டங்களுக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாக அமையும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பும் கூட.

இதைவிடுத்து மக்கள் பல்வேறுவிதமான அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் சூழலில் தேர்தலை நடத்தக் கோருவதன் ஊடாக பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களுக்கு நிவாரணம் கிடைக்கப் பெறாது.

அதன் காரணத்தினால் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி தீர்மானங்களை முன்னெடுக்கப்படுவதே கட்சிகள் முன்பாக இருக்கும் பாரிய பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# மகிமைமிக்க மார்கழி மாதத்தில் வருகின்ற திருவாதிரை இன்று

மகிமைமிக்க மார்கழி மாதத்தில் வரும் திருவெம்பாவை விரதத்தின் இறுதிநாள் திருவாதிரை இன்று வெள்ளிக்கிழமை ஆகும். மார்கழி மாத திருவாதிரை தினத்தில் சிவபெருமானை பூஜித்து வழிபட்டால், நல்ல கணவன் கிடைப்பார். மாங்கல்யப் பலன் பெருகும். பாவங்கள் நீங்கும், அறிவும் ஆற்றலும் கூடும். இவ்வாறான எண்ணற்ற பலன்களைக் கொடுக்கும் விரதமாக இது உள்ளது.

மார்கழி திருவாதிரை நாளில், சுவாமிக்கு களி படைத்து குழந்தைகளுக்கு வழங்கலாம். நாள் முழுவதும் சிவபுராணம், தேவாரம், திருவாசகத்தை பக்தியுடன் படிக்க வேண்டும். இரவில் எளிய உணவு சாப்பிட்டு விரதத்தை முடிக்கலாம். சிவபெருமான் அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்று வடிவம் கொண்டவர். இம்மூன்று வடிவங்களிலும் சிவபெருமான் அருள்புரியும் தலம் சிதம்பரம்.



தில்லையில் சேந்தனார் என்னும் சிவபக்தர் வாழ்ந்து வந்தார். அவர் விறகு வெட்டி, விற்று தன் குடும்பத்தை நடத்தி வந்தாலும், தினமும் சிவபூஜை செய்ய தவறமாட்டார். அதுமட்டுமல்லாமல் தன்னை நாடி வரும் சிவனடியார்களுக்கு விருந்தளித்து மகிழ்வார்.

ஒருநாள் திருவாதிரை திருநாளுக்கு முதல் நாள் இரவிலிருந்து கடுமையாக மழை பெய்து கொண்டிருந்தது. தொடர்மழையால் எங்கும் வெளியில் விறகு வெட்டச் செல்ல முடியாமல் சேந்தனார் தவித்தார். அதனால் வீட்டில் சமைப்பதற்கு எந்தப் பொருளும் இல்லை. காட்டுக்குச் சென்று விறகு வெட்டிக் கொண்டு அதை விற்று வந்தால்தான் அன்றைக்கு உணவு.

அதனால் சிவனடியார் யாராவது வந்தால் என்ன செய்வது? அவர்களை எப்படி உபசரிப்பது? என்று சேந்தனாரும், அவரது மனைவியும் கவலைப்பட்டு கொண்டிருந்தார்கள். அப்பொழுது, அவர்கள் வீட்டின் வாசல் முன், திருச்சிற்றம்பலம்! சம்போ மகாதேவா... என்ற குரல் கேட்டது. வெளியில் சிவனடியாரை பார்த்ததும் அவரை மகிழ்வுடன் வீட்டிற்குள் அழைத்து, அவருக்கு ஆசனம் அளித்து பணிவிடை செய்தார்கள்.

சிவனடியாரின் பசியை போக்க வீட்டில் சமைப்பதற்கு ஒன்றும் இல்லை என்பதால், சேந்தனாரின் மனைவி, வீட்டில் இருந்த சிறிதளவு அரிசிமாவில் வெல்லப்பாகு தயாரித்து கலந்து களி கிளறினாள். சிவனடியாரும் அவர்கள் கொடுத்த களியை உண்டு, மகிழ்வுடன் அவர்களை வாழ்த்தி, விடைபெற்று சென்றார்.

மறுநாள் காலை சேந்தனாரும், அவரது மனைவியும் ஸ்ரீநடராஜ பெருமானை தரிசிக்க சிவாலயம் சென்றார்கள். அங்கு கோவிலை திறந்த தில்லை வாழ் அந்தணர்கள், இறைவன் சந்நிதியில் களி சிதறி கிடப்பதை கண்டு வியந்தார்கள். சேந்தனாரும், அவரது மனைவியும் இறைவன் முன் களி சிதறி கிடப்பதை கண்டு ஆச்சரியமடைந்தனர். சேந்தனாரும், தமது வீட்டிற்கு சிவனடியார் வந்ததையும், அவருக்கு களி கொடுத்து உபசரித்ததையும் அந்தணர்களிடம் கூற, இது நடராஜ பெருமானின் திருவிளையாடல் என்பதை அறிந்து, சேந்தனாரையும் அவரது மனைவியையும் போற்றி மகிழ்ந்தார்கள்.

அன்றிலிருந்து மார்கழி திருவாதிரை திருநாளில் களி செய்து ஸ்ரீநடராஜ பெருமானுக்கு நிவேதனம் செய்வது வழக்கமாகி விட்டது என்று புராணம் கூறுகிறது.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# இந்தியாவின் உயர் விருது பெறும் குமார் நடேசன்

சமூக சேவையாளரும் ஊடகத்துறை சார் பிரதிநிதியும் வீரகேசரி நிறுவனமான எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட்டின் நிர்வாக இயக்குநருமான குமார் நடேசனுக்கு இந்தியாவின் உயர் விருதான 'பிரவாசி பாரதீய சம்மான் விருது' வழங்கப்படவுள்ளது.

பிரவாசி பாரதீய சம்மான் விருது என்பது வெளிநாட்டுவாழ் இந்தியர்களுக்கு வழங்கப்படும் உயரிய கௌரவமாகும். இந்த விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையிலிருந்து 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும். வெளிநாடு வாழ் இந்தியர்கள் தினத்தின் அங்கமாக மத்தியப் பிரதேசத்திலுள்ள இந்தூரில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.



17ஆவது தடவையாக வழங்கப்படும் இந்த விருதுகள் வெளிநாடுகளில் வாழும் இந்திய வம்சாவளி தனிநபர்கள், இந்தியாவில் வசிக்காத இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளி தனிநபர்கள் ஆகியோரால் ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அவர்கள் மேற்கொண்ட சிறந்த சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் இந்திய ஜனாதிபதியால் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டுக்கான பாரதிய சம்மான் விருதுகள் அந்த விருதுகள் தொடர்பான நடுவர்கள் சபையில் முன்வைக்கப்பட்ட விருது பெறுபவர்கள் பட்டியலைப் பின்பற்றி வழங்கப்படுகின்றன.

இந்திய உபஜனாதிபதியை தலைவராகவும், வெளிவிவகார அமைச்சரை உபதலைவராகவும் தமது வாழ்நாளில் பல்வேறு துறைகளில் தடம் பதித்த ஏனைய கீர்த்திபெற்ற உறுப்பினர்களையும் கொண்ட மேற்படி விருதுகளுக்கான நடுவர் சபையால் இந்த ஆண்டுக்கான பிரவாசி பாரதீய சம்மான் விருதுகளுக்கான நியமனங்கள் பரிசீலிக்கப்பட்டு விருது பெறுவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம்முறை உலகளாவியரீதியில் 27 பேர் இந்த விருதுக்கு தெரிவாகியுள்ளனர். இவர்களில் இலங்கையிலிருந்து சிவகுமார் நடேசன் (குமார் நடேசன்) இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

குமார் நடேசன் பிரிட்டிஷ் பேரரசின் ஆணையைப் பெற்ற ஆர்.ஏ. நடேசனின் புதல்வராவார். கொழும்பில் பிறந்த இவர், தனது ஆரம்பக்கல்வியை கொழும்பு சென். தோமஸ் கல்லூரியிலும் உயர்கல்வியை சென்னை லோயலா கல்லூரியிலும் சென்னை பல்கலைக்கழகத்திலும் பயின்றார். அத்துடன் தொழில்நிலை பட்டப்படிப்பாகிய பரிஸ்டர் கற்கையை லண்டனில் கற்றார். அதனைத் தொடர்ந்து 15 ஆண்டுகள் இலங்கை உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக கடமையாற்றினார்.

குமார் நடேசன் கடந்த 22 ஆண்டு காலமாக வீரகேசரி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக கடமையாற்றி வருகின்றார். அத்துடன் இந்திய வம்சாவளி மக்களின் உலகளாவிய அமைப்பின் (கோபியோ– இலங்கை கிளை) தலைவராக செயற்படுவதுடன், இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தலைவராக கடந்த 15 வருடகாலம் பணியாற்றி வருகின்றார்.

இலங்கை, இந்திய நல்லுறவு சங்கத்தின் தலைவராகவும் அவர் பணியாற்றியிருந்தார். ரோட்டரி கழகத்தின் கொழும்புக்கிளையின் அங்கத்தவராக திகழும் இவரது சேவையைப் பாராட்டி சர்வதேச ரோட்டரி கழகமானது 'சுய வேலைக்கு மேல் சேவை' என்ற பட்டமளித்து கௌரவித்திருந்தது. போதைப்பொருள் துஷ்பிரயோகத்துக்கு எதிரான தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பின் முன்னாள் தலைவராகவும் இவர் பதவி வகித்துள்ளார். தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு வாரியம் தன்னார்வ தொண்டு குழுவின் முன்னாள் உறுப்பினராகவும் இவர் திகழ்ந்துள்ளார்.

இவர் சின்மயா மிஷன் நிர்வாக சபை உறுப்பினராக பணியாற்றியிருந்தார். இவ்வாறு பல்வேறு அமைப்புக்களிலும் அங்கத்துவம் வகித்து மக்கள் சேவையாற்றிவரும் குமார் நடேசனுக்கு இந்த விருது வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பாகிஸ்தானின் வெள்ளப்பாதிப்பு புனர்வாழ்வு பணிகளுக்கு உலக நாடுகள் ஆதரவு வழங்கும்

எதிர்வரும் 9ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெறவுள்ள காலநிலைக்கு முகம்கொடுக்கும் பாகிஸ்தான் பற்றிய சர்வதேச மாநாட்டில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானின் மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வுக்கு ஆதரவு வழங்க உலக நாடுகள் முன்வருமென்று பிரதமர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நம்பிக்கை தெரிவித்தார்.

புனரமைக்கப்பட்ட கிலி ஜியா கான் அரசு ஆண்கள் மேல்நிலைப் பாடசாலையை திறந்து வைத்து உரையாற்றிய பிரதமர் ஷேபாஸ் ஷெரீப், நட்பு நாடுகளின் ஆட்சியாளர்களை மாநாட்டில் கலந்து கொள்வதற்கு தொடர்ந்து தொடர்புகொண்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

"மலேசிய பிரதமர் அன்வர் இப்ராகிமுடன் பேசினேன். மாநாட்டிற்கு ஒரு தூதுக்குழுவை அனுப்புவதாக அவர் என்னிடம் உறுதியளித்தார். அவரும் ஸூம் தொழில்நுட்பம் மூலமாக இணைவதாகக் கூறினார். மேலும் துருக்கி, கட்டார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தலைவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளேன்" எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் உடன் இணைந்து பிரதமர் இம்மாநாட்டிற்கு தலைமை தாங்குவார் என்று அவர் கூறினார்.

பெனாசிர் வருமான ஆதரவுத் திட்டத்தின் மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் ஏற்கனவே 100 பில்லியன் ரூபா விநியோகித்துள்ளது, ஆனால் வெள்ளத்தால் அழிக்கப்பட்ட ஒரு மில்லியன் வீடுகளுக்கு இழப்பீடு வழங்க இன்னும் அதிகமான நிதி தேவைப்படுகிறது, மேலும் பலர் தங்கள் மறுவாழ்வுக்கான உதவிக்காக இன்னும் காத்திருக்கின்றனர் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

புதிதாக கட்டப்பட்டுள்ள பாடசாலை கட்டடத்தின் பெயர்ப் பலகையை திறந்து வைத்த பிரதமர், பஞ்சாபின் டேனிஷ் பாடசாலைகளுக்கு இணையாக இந்த வசதியை மேம்படுத்துவதாக அறிவித்தார். மின் நூலகம், சூரிய ஆற்றல், விளையாட்டு மைதானம் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் தரம் உயர்த்தப்பட்ட பாடசாலையை மார்ச் 23 ஆம் திகதி திறந்து வைப்பதாக அவர் உறுதியளித்தார்.



## பிரதமர் ஷேபாஸ் ஷெரீப் நம்பிக்கை

மாகாணத்தின் ஏழைக் குழந்தைகளுக்கு சமமான கல்வி வசதிகளை வழங்குவதற்காக பலுசிஸ்தான் முழுவதும் 12 டேனிஷ் பாடசாலைகள் கட்டப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாடசாலைக் கட்டடத்தை இரண்டு மாதங்களுக்குள் கட்டி முடித்ததற்காக அரசு அதிகாரிகள் மற்றும் மாகாணத் தலைமையின் செயல்திறனைப் பாராட்டிய பிரதமர், தலைமைச் செயலாளர் மற்றும் கல்விச் செயலாளர் உட்பட மூன்று அதிகாரிகளுக்கு தம்காஇகித்மத் விருதையும் வழங்கினார்.

மீறப்பட்ட ஐ.எம்.எஃப் உடன்படிக்கை, எண்ணெய் விலை உயர்வு மற்றும் குறைந்த கோதுமை உற்பத்தி போன்ற நிலைமையில் இருக்கும் போதே இந்த அரசாங்கம் இந்த நாட்டைப் பொறுப்பேற்றது என்று கூறிய அவர், கடந்த அரசாங்கம் சர்வதேச சந்தையில் மிகக் குறைந்த விலையில் எரிவாயு இருக்கும் போது கொள்வனவு செய்யத் தவறியதால், தற்போதைய அரசாங்கம் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எண்ணெய் இறக்குமதிக்காக $27 பில்லியன் செலவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றார்.

மாகாணத்தில் டேனிஷ் பாடசாலைகளை அமைப்பதற்கு பொருத்தமான நிலத்தைத் தேர்ந்தெடுக்குமாறு பலுசிஸ்தான் முதலமைச்சரிடம் பிரதமர் வேண்டிக் கொண்டார். மேலும், மாணவர்களுடன் வகுப்பறையில் அமர்ந்து கலந்துரையாடிய பிரதமர், அவர்களுடன் சேர்ந்து மைதானத்தில் விளையாடினார்.

புனர்நிர்மாணம் மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் குறித்து விளக்கமளித்த பிரதமர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருடனும் கலந்துரையாடினார்.

# சர்வதேச விவாத விருதை வென்றெடுத்துள்ள APIIT

APIIT, ஐக்கிய இராச்சியத்தில் (UK) உள்ள Staffordshire University மற்றும் மலேசியாவின் Asia Pacific University of Technology and Innovation ஆகியவற்றுடன் இணைந்து நிறுவப்பட்ட ஒரு புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனமாகும்.

1999 இல் ஸ்தாபிக்கப்பட்ட APIIT Sri Lanka, இலங்கையின் உயர்கல்வித் துறையில் புகழ்பெற்ற நிறுவனமாகும். 1,400 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் அதேவேளை, வருடாந்தம் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் புதிதாக இணைகிறார்கள். இந்நிறுவனமானது இலங்கையில் வெளிநாட்டு பட்டப்படிப்புகளை வழங்கும் மிகப் பெரிய மற்றும் பழைமையான தனியார் பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும்.

Staffordshire University இன் சட்ட இளங்கலை பட்டம் (LLB Hons) கற்கைநெறியானது, தொழிற்துறையில் மாணவர்களின் குறித்த தேவைகளை பூரணப்படுத்தவும், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அவர்கள் அங்கீகாரம் பெறுவதையும் நோக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் சர்வதேச தொடர்புகளின் மூலம் APIIT இல் சட்டம் பயிலும் மாணவர்கள் வகுப்பறைக் கல்விக்கும் மேலான அனுபவத்தைக் கைக்கொள்கின்றனர். அத்தோடு மாணவர்கள் புறப்பாட செயற்பாடுகள் பலவற்றில் ஈடுபட ஊக்குவிக்கப்படுவதோடு தகுந்த பயிற்சியோடு பல போட்டித்தொடர்களில் பங்கேற்கவும் வழிநடத்தப்படுகின்றனர். இவ்வாண்டு இரண்டு சர்வதேச போட்டிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்பினை மாணவர்கள் பெற்றுள்ளனர்.

இம்முறை மலேசியன் தெரங்கனு பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச தமிழ் சொற்போர்த் தொடரில் APIIT சட்டப் பல்கலைக்கழகத்தின் Moot Debate மற்றும் Mock Mediation Society இனை பிரதிநிதித்துவப்படுத்தி இரண்டு விவாத அணிகள் களம் கண்டிருந்தன. இப்போட்டியில் அவுஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 46 அணிகள் பங்கேற்றன. இதில் முதலிடத்தைத் தட்டிச் சென்ற APIIT விவாத அணியில் செல்வி பிரதாயினி ஸ்ரீராகவராஜன், செல்வி சாய்சுருதி தயாபரன், செல்வன் சத்தியசீலன் மயுரேசன், செல்வன் கௌசிகன் மதியழகன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

மேலும் இத்தொடரின் இரண்டாவது விவாதப் போட்டியான Piala Debate Tamil Andrangasaba, இந்திய கலாசார அமையம் மலேசியா, தமிழ்ச் சிறகுகள் இந்தியா, திகடச்சக்ர – இலங்கை, பாரத பண்பாட்டுக்கழகம் UMT ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் மலேசியன் தெரங்கனு பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்டது.

முதல் 16 அணிகளுக்குள் தேர்வான APIIT சட்ட பல்கலைக்கழகத்தின் மற்ற அணியில் மொகமட் சாதிக் அகிலா பாணு, வேணுஜா கேதீஸ்வரன், தனுஷன் சுஜீவன், கேஷியா லக்ஷி லோகராஜ் ஆகியோர் அங்கம் வகித்தனர். இந்த இரண்டு அணிகளும் நிக்ஸலன் கிருஸ்ணபிள்ளையின் பயிற்றுவிப்பு, நெறியாள்கையின் கீழ் செயற்பட்டு வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் APIIT பல்கலைக்கழகத்தில் இணைந்து மதிப்புமிக்க இத்தகைய சர்வதேச போட்டிகளில் பங்கேற்கலாம்.

மேலும் தகவல்களுக்கு, APIIT கொழும்பு 0765 788 788 அல்லது APIIT கண்டி 0773 577 877 எனும் தொலைபேசி இலக்கங்களையோ அல்லது info@apiit.lk என்ற எமது மின்னஞ்சல் முகவரியையோ அணுக முடியும்.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
**கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்குக.**

I. எமது நாட்டின் வர்த்தக பயிர்களில் மிக முக்கிய இடத்தை பெறுவது தேயிலை, தென்னை, இறப்பர் போன்ற பயிர்களாகும். தேயிலை மலை நாடுகளில் அதிகளவு பயிரிடப்படுகிறது. தேயிலை அழகாக வளர்க்கப்பட்டிருக்கும் காட்சி பச்சைக் கம்பளம் விரித்தாற் போல மலை முழுவதும் பசுமை படர்ந்து காட்சி தருகிறது.

1. எமது நாட்டின் முக்கிய வர்த்தக பயிர்கள் எவை?

………………………………………………………………………………………

2. பந்தியிலுள்ள உவமைத் தொடரினை எழுதுக.

………………………………………………………………………………………

3. மேலுள்ள பந்தியிலிருந்து வினை அடைமொழி ஒன்றினை தெரிந்தெழுதுக.

………………………………………………………………………………………

4. பந்தியிலிருந்து குணப்பெயர் ஒன்றினை தெரிவு செய்க.

………………………………………………………………………………………

5. இங்கு ‘பசுமை’ என குறிப்பிடப்பட்டிருக்கும் சொல்லின் கருத்து யாது?

………………………………………………………………………………………

6. ஒத்தகருத்து எழுதுக.

i. நாட்டின் - ………………………….. ii. மலை - ……………………...

**II. பின்வரும் வாக்கியங்களை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

7. உழவன் வயலை உழுதான் ………………………………………………….

8. சிங்கம் மானை துரத்தியது ……………………………………………………………

9. பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியீடுகளை இடுக.
i. ரவி கடைக்குச் சென்று பால் பழம் வாங்கினான்

………………………………………………………………………………………

ii. நாளை பாடசாலைக்கு வருவாயா

………………………………………………………………………………………

10. சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
i. நிழலில் / ஒரு / தொப்பி / வியாபாரி / மர / இளைப்பாறினார்

………………………………………………………………………………………

ii. அக்கா / மாலை / கொண்டு / கட்டினாள் / அழகிய / பூக்களைக்

………………………………………………………………………………………

iii. நீ / பாடத்தை / நேற்று / வீட்டில் / செய்தாயா?

………………………………………………………………………………………

11. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ‘சரி’ எனவும் பிழையாயின் ‘பிழை’ எனவும் எழுதுக.
i. நான் கோயிலுக்கு சென்றான் ( )
ii. நட்சத்திரங்கள் வானில் மின்னின ( )
iii. குழந்தை தொட்டிலில் உறங்கினர் ( )

12. வேம்பு கன்று போல பனை - …………………………………………..

13. சிங்கம் கர்ச்சிக்கும் என்பது போல யானை - ……………………………………..

14. ஒற்றுமையே பலம் என்பதனை விளக்கும் பழமொழி - ………………………………

15. பார்வையாளர் கூட்டம் மெல்ல மெல்ல கலையத் ……………………………….....
(தொடங்கினர், தொடங்கியது)

16. கூட்டத்தைக் குறிக்கும் சொல்லை எழுதுக


i. புகையிலை - ……………………… ii. பல் - ……………………………...

17. மயிலின் ஆண் மரபுப் பெயர் - …………………………………………………….

18. எதிர்கருத்து தருக.

i. வானம் - ………………………….. ii. ஐக்கியம் ……………………

19. பின்வரும் பொருட்களின் பெயர்களின் சிங்கள சொற்களை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.






i. …………………………….. ii. …………………………………..

20. ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

i. Are you coming - ……………………………………………………

II. My country is Sri Lanka - ……………………………………………………

**III.**

21. 

இவ்வுருவில் செங்கோணத்தை விட குறைவான கோணங்கள் எத்தனை உள்ளன?


………………………………………………………

22. 

இக்கடிகார முகம் காட்டும் நேரம் அடுத்து இதே நேரத்தை அடைய சின்ன முள் எத்தனை தடவை சுற்றவேண்டும்?

……………………………………………………

23. கார்த்திகா இம்முக்கோணத்தை இரண்டு முறை சுற்றி வந்தாள். அவள் அதனை சுற்றி வர எத்தனை மீற்றர் பயணித்திருப்பாள்?




……………………………………………………………..

24. 7682 இவ்வெண்ணை சொற்களில் தருக.


………………………………………………………………………………………

25. 7 + 8 + 6 – 11 = ……?…… இதற்குரிய விடையை உரோமன் இலக்கத்தில் தருக.

………………………………………………………………………………………


26. 7 kg சீனி ரூபாய் 2100.00 எனில் 2 kg சீனி எவ்வளவு ரூபாய்?

………………………………………………………………………………………

27. 

நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக தருக.

……………………………………………………………

28. 


இவ்வெண்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண் யாது?

……………………………………………………………

29. ஒரு பாத்திரத்தின் கொள்ளளவு 8*l*. அதில் தற்போது 3*l* பால் உள்ளது. இன்னும் எத்தனை லீற்றர் பாலை இடலாம்?

………………………………………………………………………………………

**IV. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. தாவரங்கள் பசுமையாக வளர தேவையான காரணி எது?
i. வெப்பம் ii. காற்று iii. நீர்

31. நாம் நடந்து செல்லும்போது முதலில் நிலத்தில் பட வேண்டிய காலின் பகுதி எது?
i. விரல்கள் ii. உள்ளங்கால் iii. குதிகால்

32. பின்வருவனவற்றுள் உடல் வளர்ச்சிக்குரிய உணவு அல்லாதது
i. பழங்கள் ii. சோயா அவரை iii. மீன்

33. மண்ணில் மண்வளியை அதிகரிக்க உதவும் பிராணி
i. எறும்பு ii. மண்புழு iii. கறையான்

34. பிளாஸ்திக்கு கழிவுகளை இடவேண்டிய குப்பைத் தொட்டி பின்வருவனவற்றுள் எது?

i 
ii. 
iii 

35. இலங்கையில் மிகப்பெரிய மலை எது?
i. சிவனொளிபாதமலை ii. நமுனுகுல மலை iii. பீதுருதாலகால மலை

36. திசையறி கருவி அதிகமாக தேவைப்படுவது
i. வைத்தியர்களுக்கு ii. மாலுமிகளுக்கு iii. விவசாயிகளுக்கு

37. இலங்கையில் மிக உயர்ந்த இடத்தில் அமைந்துள்ள புகையிரத நிலையமானது
i. பதுளை ii. கண்டி iii. ஹட்டன்

38. பௌத்த சமயத்தின் புனித மரம்
i. வேம்பு ii. வெள்ளரசு iii. மா

39. சிவப்பு நிறமற்ற இரத்தத்தைக் கொண்டுள்ள பிராணிகளில் ஒன்று
i. கரப்பான் ii. எலி iii. அணில்

40. கடல்வாழ் முலையூட்டியானது
i. மீன் ii. சுறா iii. திமிங்கலம்

41. கோள் மண்டலத்தில் சூரியனுக்கு அடுத்துள்ள கோளானது
i. வெள்ளி ii. புதன் iii. பூமி

42. காற்றின் மூலம் பரவலடையாத தாவரமானது
i. எருக்கலை ii. பஞ்சு iii. மா

43. தொல்பொருட்கள் அதிகளவு கண்டெடுக்கப்படும் மாவட்டமானது
i. அநுராதபுரம் ii. சிலாபம் iii. கண்டி

44. இலங்கைக்கேயுரிய நகருயிரானது
i. பல்லி ii. கொம்பு ஓணான் iii. புலி

45. தேசிய தரச்சான்றிதழை குறிப்பது
i. SLS ii. ISO iii. CFL

46. இரவு நேரம் பாதையில் பயணிப்போர் அணிய வேண்டிய உடையின் நிறம்?
i. வெள்ளை ii. சிவப்பு iii. கறுப்பு

(08ஆம் பக்கம் பார்க்க)

07 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

47. சிக்கன் குனியா நோயை பரப்புவது
i. நுளம்பு ii. கோழி iii. எலி

48. பறக்க முடியாத பறவை அல்லாதது
i. பென்குயின் ii. தீக்கோழி iii. கோழி

49. ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு தொற்றாத நோயானது
i. காய்ச்சல் ii. நீரிழிவு iii. தடிமன்

50. இலங்கையின் மிகப்பெரிய வனமாகிய 'படகமுவ' அமைந்துள்ள மாவட்டமானது
i. குருநாகல் ii. யாழ்ப்பாணம் iii. காலி

51. மஞ்சள் நிறமும் நீலநிறமும் கலந்தால் பெறப்படும் நிறமானது
i. செம்மஞ்சள் ii. பச்சை iii. ஊதா

52. கண், காது மூலம் தகவல் பெறப்பட உதவும் ஊடகமானது
i. வானொலி ii. பத்திரிகை iii. தொலைக்காட்சி

53. கிராமிய விளையாட்டுக்களில் ஒன்றானது
i. கிரிக்கெட் ii. கிட்டிப்புள் iii. கூடைப்பந்து

54. உயரமான கட்டிடங்களை கட்டுவோர் கட்டாயமாக பயன்படுத்த வேண்டிய பாதுகாப்பு கவசம்
i. தலைக்கவசம் ii. கையுறை iii. காலுறை

55. 'அலங்கார கோலமிடல்' எந்த மதத்தினருடன் தொடர்புடைய சடங்காகும்
i. பௌத்தர்கள் ii. இந்துக்கள் iii. இஸ்லாமியர்கள்

56. வீட்டுத்தோட்ட வேலிக்கு மிகப்பொருத்தமான ஒரு தாவரவகை
i. முள்முருங்கை ii. ஆடாதோடை iii. கிளிசிரிடியா

57. முரண்பாடுகளை தவிர்க்க பயன்படுத்தப்படவேண்டிய நடத்தை வகையானது
i. நடுநிலையான நடத்தை ii. தாழ்வான நடத்தை
iii. ஆக்கிரமிப்பு நடத்தை

58. கடும்பச்சை நிறக் காய்கறிகளில் அதிகளவு காணப்படும் கனியுப்பு
i. கல்சியம் ii. அயடின் iii. இரும்பு

59. எமது நாட்டில் அதிக மாவட்டங்களை கொண்ட மாகாணமானது
i. வடமாகாணம் ii. தென்மாகாணம் iii. சப்பிரகமுவ மாகாணம்

**V.**

60. "என்னை நல்வழிப்படுத்திய புத்தகம்" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமலும் சரியான எழுவாய், பயனிலை தொடர்பினையும் கொண்டிருக்க வேண்டும்.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

# மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் மனிதாபிமானம் மிகவும் முக்கியமானது

**மனித மேம்பாட்டுக்கு அடிகோலியவர்களுள் எம்பவர் மகளிர் சங்கத்தின் தலைவி பாத்திமா ரியாஸாவும் ஒருவர். அவர் செய்கின்ற மனிதாபிமான உதவிகள் எல்லாம் பின்தங்கிய குடும்பங்களில் வாழும் வறிய சிறார்களையும் வறிய குடும்பங்களையும் விதவைத் தாய்மார்களையும் மேம்படுத்தும் காரியமாகும். ஏக்கத்துடனும் பெருமூச்சுடனும் வாழ்ந்த குடும்பங்கள் ரியாஸாவின் உதவிகளைப் பெற்று நாள்தோறும் உயரிய இலக்கு நோக்கி மேலெழுந்து வருகின்றனர். இத்தகைய சமூகப் பணியாளர் நாடளாவிய ரீதியில் ஆங்காங்கு ஆற்றும் பணிகளை ஒன்று சேர்த்துப் பார்த்தால் மிகவும் அளப்பரியதாக அமையும் என்று ஓய்வு பெற்ற அதிபர் ஏ. ஆர். எம். உவைஸ் தெரிவித்தார்.**



*எம்பவர் மகளிர் சங்கத்தின் ஏற்பாட்டில் கண்டி உடத்தலவின்னையை அண்மித்த பிரதேசங்களில் வாழும் வறிய, பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கான நீர்த்தாங்கிகள், வீடமைப்பு நிதி உதவி மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்குப் போசாக்கு உணவு வழங்கி வைக்கும் வைபவம் கண்டி உடத்தலவின்னை ஜாமிஉல் அஸ்ஹர் தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் சங்கத்தின் தலைவி பாத்திமா ரியாஸா தலைமையில் இடம்பெற்றது.*

*இந்நிகழ்வில் பிரதம அதிதியாக உடத்தலவின்னை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரில் சிரிவர்த்தன கலந்து கொண்டு சிறப்பித்தார்.*

*40 குடும்பங்களுக்கு தலா 30,000 ரூபா பெறுமதியான வீட்டுக் கட்டட நிர்மாணப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான வவுச்சரும், பல்கும்புர பாடசாலைக்கு, ரட்டகஹவத்த நூர் பள்ளிவாசல், வறிய குடும்பத்தினர்களுக்கான நீர்த் தாங்கிகள் வழங்குதல், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ரூபா 5,000 பெறுமதியான போசாக்கு உணவு வழங்குதல் ஆகியன நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.*

*இந்நிகழ்வில் உடத்தலவின்னை அல் ஹிக்மா ஜும்ஆப்பள்ளிவாசலின் தலைவர் எம். ஏ. எம். சஹீட், ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆலோசகர் வஸீர், ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர் உவைஸ் மற்றும் கிராம சேவை உத்தியோகஸ்தர் லஹிரு விஜயமான,ஊரின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.*

*இந் நிகழ்வில் தொடர்ந்தும் பேசிய ஓய்வு நிலை அதிபர் உவைஸ்,..*

*பாத்திமா ரியாஸா, இந்த கோரிக்கையை முன் வைத்தார். அந்த வகையில் நாங்கள் இது நல்ல காரியம் எங்களால் இயன்ற உதவியை கட்டாயமாக வழங்கத் தயாராக இருக்கிறோம் என்று உற்சாகத்தைக் கொடுத்தோம்.அந்த வகையில் எட்டு வருடங்களை கடந்து இந்தளவுக்கு இந்த அமைப்பு வளர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கும் போது நான் பெருமைப்படுகின்றேன்.*

*நான் அதை ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன்.அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகின்றான், இயலாதவர்களுக்கு வசதியற்றவர்களுக்கு உணவளிக்க வேண்டும் அல்லது உணவளிக்கத் தூண்டுதல் செய்ய வேண்டும். அந்த வகையில் நான் தூண்டுகின்ற பணியைச் செய்துள்ளேன் என்ற மனத்திருப்தி எனக்கு இருக்கிறது. இதற்கான நன்மையும் எனக்கு கிடைக்கும். நீங்கள் செய்யும் நன்மையான மனிதாபிமான உதவிகளில் என்னையும் ஒரு பங்குதாரராக மாற்றிய இவ்வமைப்பின் தலைவி பாத்திமா ரியாஸானாவுக்கு என்னுடைய மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.*

*கடந்த எட்டு வருட காலத்தில் இந்த அமைப்பு மிகவும் சாதாரண முறையில் முதன் முறையாக எமது உடத்தலவின்னைப் பிரதேசத்தில் உலருணவுப் பொதிகளை விநியோகிக்க ஆரம்பிக்கப்பட்டது. நோன்பு காலத்தில் இருந்து இந்த உலருணவுப் பொதிகளை தொடர்ச்சியாக பகிர்ந்தளிக்கப்பட்டு வந்தன. அதனைத் தொடர்ந்து கொரோனா காலம் வந்தது. அக்காலத்திலும் உடத்தலவின்னைப் பிரதேசத்தில் மட்டுமல்ல அயல் கிராமங்களிலும் உள்ள மக்களுக்கு இந்த உலருணவுப் பொருட்களை வழங்கும் நடவடிக்கைகளிலும் இந் நிறுவனம் ஈடுபட்டது.இனிகலை, கண்டி மாவட்டத்திலுள்ள உக்குரஸ்பிட்டிய, கடுகன்னாவ, என்ருதென்ன, அக்குறணை ஆகிய பிரதேசங்களில் உள்ள பயனாளிகளுக்கு வியாபித்து செயற்பட்டது. பின்பு கண்டி மாவட்டத்திற்கு வெளியே உள்ள கிழக்கு, ஊவா போன்ற பிரதேசங்களில் வாழும் மக்களுடைய நலன்கருதி இவ்வமைப்பு பாரிய தொரு தொண்டுப் பணியை ஆற்றி வருகின்றது.*

*இந்த மகளிர் அமைப்பு தனவந்தர்களிடமும் மற்றும் சிவில் சமூகத் தொண்டு நிறுவனங்களிடமும் சென்று உதவிகளைப் பெற்று செயற்பட்டு வருகின்றது. அவர்களிடத்தில் இருந்து போதுமானளவு உதவிகளையும் பெறும் ஆற்றலும் திறமையும் இவ்வமைப்பின் தலைவி ரியாஸாவிடத்தில் இருக்கிறது. அதே போன்று அவருடைய கணவர் பாஸி, பிள்ளைகளான ஸாக்கியா, சஹ்லா போன்றவர்கள் இந்த அமைப்புக்கு பக்கபலமாக இருந்து வருகிறார்கள். அதுவும் ஒரு பெரிய பாக்கியம் என நான் கருதுகிறேன்.*

*இந்த அமைப்பு ஆரம்பத்தில் உலருணவு விநியோகத்தில் தொடங்கி வறிய பாடசாலைப் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள், பாதணிகள், பேக் போன்றவை வழங்கப்படுகின்றன. அத்துடன் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கும், க. பொ. த சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான விசேட இலவசக் கருத்தரங்குகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். வசதி குறைந்த குடும்பங்களில் நடைபெறும் திருமண வைபவங்களுக்காக ஆண் பெண் இரு தரப்பினர்களுக்கும் உதவி செய்து வருகின்றனர்.*

*வீடுகள் நிர்மாணிப்பதற்காகவும் திருத்தப் பணிகளுக்காகவும் இவ்வமைப்பு தொடர்ந்து உதவிகளைச் செய்து வருகின்றன. அதே போன்று குடிநீர் வசதி,நீர்த் தாங்கிகளையும் விநியோகித்து வருகிறார்கள். அதே போன்று மின்சார வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான மின் இணைப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து வருகிறார்கள்.*

*பெண்கள் மத்தியில் சுயதொழிலை ஏற்படுத்தி குடும்பத்தில் மேலதிக வருமானத்தை ஏற்படுத்தும் நோக்கில் சுமார் 500 க்கும் மேற்பட்ட தையல் இயந்திரங்களை இந் நிறுவனம் கையளித்திருக்கின்றது. அவை மட்டுமல்ல வறிய குடும்பத்திலுள்ள மக்களிடையே பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு வியாபாரத் துறையை ஊக்குவிக்கின்ற நோக்கில் குடும்பஸ்தர் ஒவ்வொருவருக்கும் தலா 75,000 ரூபா பெறுமதியான வியாபார நடைவண்டிகள் செய்து கொடுத்து குடும்ப பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை செய்கிறது.*

*இவை தவிர வியாபாரத்தை மேம்படுத்துவதற்காக கடைகள் நிர்மாணித்துக் கொடுத்தல் போன்ற பல தரப்பட்ட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த எட்டு வருட காலத்தில் பல கோடி ரூபா பெறுமதியான வேலைகள் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பல கோடி ரூபா பெறுமதியான வேலைக்கும் பின் நின்று உழைக்கின்ற ஒரே ஜீவன், ஓரே ஒரு பெண்மணி ரியாஸா மட்டுமே. அவரை ஒரு இரும்புப் பெண் என்று கூடக் குறிப்பிடலாம். அவர்களுக்கு எங்களுடைய நன்றிகளும் பாராட்டுக்களும் எப்பொழுதும் இருக்கிறது.*

*அதேவேளை இந்நிறுவனத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் நீர்த்தாங்கிகள் விற்பனை செய்யப்படுவதாக அறிகின்றோம்.தையல் இயந்திரங்களையும் விற்பனை செய்வதாக அறிகின்றோம். இது ஆரோக்கியமான செயற்பாடுகள் அல்ல. ஏமாற்றக் கூடாது. உங்களையும் எங்களையும் படைத்துப் பராமரிக்கின்ற அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான். உங்களுக்குத் தேவையில்லாமல் அவசியமில்லாமல் இன்னுமொருவருக்கு கொடுக்க வேண்டிய நீர் தாங்கியை நீங்கள் பெற்று கொண்டால் அல்லாஹ்விடத்தில் குறித்த நபர்கள் வகை சொல்லியே ஆக வேண்டும்.*

*நீங்கள் எந்நாளும் வாங்குபவர்களாக இருக்கக் கூடாது. நீங்களும் கொடுக்கக் கூடியவர்களாக மாற வேண்டும். தொடர்ந்து வாங்கி பழகி விட்டால் தொடர்ந்து அப்படியோ தான் இருப்போம். கொடுக்கிற கரங்களாக நீங்கள் எல்லோரும் மாற வேண்டும். அல்லாஹ்விடம் துஆப் பிரார்த்தனைகளைச் செய்யுங்கள். எங்களையும் கொடுக்கிறவர்களாக மாறவும் வாழவும் வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.*

### உடத்தவலின்னை கிராம உத்தியோகஸ்தர்....

*இந்நிகழ்வில் எமது பிரதேச செயலாளர் கலந்து கொண்டு சிறப்பிக்க இருந்தார். ஆனால் துரதிருஷ்டவசமாக அவர் அத்தியாவசியமான நிகழ்வொன்றில் கலந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் காரணமாக இந்நிகழ்வில் அவரால் சமுகமளிக்க முடியவில்லை. அந்த வகையில் அவர் சார்பாக என்னுடைய மனக்கவலையைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.*

*இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு எட்டு வருடங்களாகின்றன என்று கூறிய போதிலும் இந்தப் பகுதியில் நான் அரச கடமைகளைப் புரிவதற்காக வந்து நான்கு வருடங்கள் ஆகின்றன. இங்கு வந்த காலம் முதல் இன்று வரையிலும் இந்த அமைப்பினால் முன்னெடுக்கப்படும் அதிகளவிலான மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளுகின்ற நடவடிக்கைகளில் பங்கேற்றுள்ளேன் என்று கூறிக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.*

*இதை நாம் மதிக்க வேண்டும்.*













**இக்பால் அலி**

# சமஷ்டித் தீர்வை வலியுறுத்தி கிழக்கில் ஆர்ப்பாட்டங்கள்







**காரைதீவு, றொட்டவெவ குறூப், அன்புவழிபுரம் தினகரன் நிருபர்கள்**

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மீளப் பெற முடியாத சமஷ்டித் தீர்வை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் ஒன்றிணைய வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவிலிலும் திருகோணமலை மாவட்டத்திலும் நேற்று (05) பாரிய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டங்களானது, 'ஒருமித்த குரலினை உரக்கச் சொல்வோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் நடத்தப்பட்டது.

திருக்கோவிலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன், திருக்கோவில் பிரதேச சபைத் தவிசாளர் இ.வி. கமலராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருமலையில் ரயில் மோதி ஒருவர் பலி

திருகோணமலை மாவட்டத்தின் மட்கோ புகையிரதக் கடவைக்கு அருகில் புகையிரதம் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி நேற்று (04) முன்தினம் பயணித்த இரவுவேளை தபால் புகையிரதம் மோதியே இவ்விபத்துச் சம்பவித்துள்ளது.

25 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளதுடன், இதில் உயிரிழந்தவர் தொடர்பில் இதுவரையில் தெரியவரவில்லையெனவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாணல்சேனை கிராமத்துக்கு
# வனவிலங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் விஜயம்

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் மேற்கு எல்லைக்கிராமமான உப்புக்காச்சிமடு நாணல்சேனையில் கடந்த 4 நாட்களாக காட்டு யானைகள் ஏற்படுத்திய சேத விபரங்களைக் கண்டறியும் வகையிலும் இக்கிராமத்துக்கு பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும் வனவிலங்கு திணைக்கள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நேற்று (04) முன்தினம் இக்கிராமத்துக்கு சென்றனர்.


யானைகளின் தொல்லையால் மிகவும் அச்சத்தில் வாழும் இக்கிராம மக்கள், தமது நிலைமை தொடர்பில் உப்புக்காச்சிமடு மீள்குடியேற்ற அபிவிருத்திச் சங்கத்தினூடாக மூதூர் மேற்கு கிராம அலுவலருக்கும் மூதூர் பிரதேச செயலாளருக்கும் தெரியப்படுத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து நாணல்சேனைக் கிராமத்துக்குச் சென்று நிலைமையை பார்வையிட்ட மூதூர் மேற்கு கிராம அலுவலரும் மூதூர் பிரதேச செயலாளரும், யானைகளின் தொல்லை தொடர்பில் வனவிலங்கு திணைக்கள பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தினர்.

இந்நிலையிலேயே, இக்கிராமத்துக்கு வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள் வருகை தந்து நிலைமையை பார்வையிட்டனர். இதன்போது யானைகள் பிரவேசிக்கும் வழிகள், சேத விபரங்கள், சுற்றுவேலி அமைத்தல், யானைவேலி அமைத்தல் உள்ளிட்டவை தொடர்பில் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு இக்கிராம மக்கள் தெளிவுபடுத்தினர்.

# மட்டக்களப்பு மாநகர சபையின் ஜனவரிக்கான 69ஆவது அமர்வு

**மட்டக்களப்பு விசேட நிருபர்**



மட்டக்களப்பு மாநகர சபையின் 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்கான 69ஆவது சபை அமர்வு, மாநகர முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் சபா மண்டபத்தில் நேற்று (05) நடைபெற்றது.

இதன்போது, நிதிக் குழுவின் சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டதுடன், மாநகர முதல்வரின் அறிவிப்பில் பன்சல வீதி மற்றும் அருணகிரி வீதிகளின் விஸ்தரிப்புக்காக காணிகளை விட்டுத்தந்த குடியிருப்பாளர்களுக்கு 3 வருடங்களுக்கு ஆதனவரி விலக்கழிப்புச் செய்வதற்காக அனுமதியை சபையில் முன்வைத்துப் பெற்றுக்கொண்டார்.

தனியார் துறையினர் வாவியின் மேல் Solar Panel மின் சேமிப்புக் கட்டமைப்பை நிறுவிப் பிறப்பிக்கப்படும் மின்சாரத்தை மின்சார சபைக்கு வழங்குவதற்காக சபையில் அனுமதியைக் கோரிய போது, சபையோர் அதை மறுத்து மாநகர சபையின் நிதியின் மூலம் அக்கட்டமைப்பை நிறுவி அதில் வரும் வருமானத்தை வரியிறுப்பாளர்களின் நலன்களுக்கு பாவிக்க முடியுமென்று சபையினர் கேட்டுக்கொண்டமைக்கமைய, மாநகர சபையின் மூலம் நிர்மாணிப்பதாகத் தெரிவித்தார்.

அத்துடன், உள்ளூர் நிலையான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மற்றும் மாநகர நிதியுடன் பொதுச்சந்தை வளாகத்திலுள்ள கட்டடங்களின் உட்கட்டமைப்புகளை புனரமைப்பதற்கான அனுமதியும் பெறப்பட்டது.

2023ஆம் ஆண்டுக்கான நிலையியல் குழுக்களான நிதி, வேலை, சுகாதாரம், நூலகக் குழுக்கள், விசேட குழுக்களான காணி, அனர்த்த முகாமைத்துவம், கலை, விளையாட்டு மற்றும் பெண்கள் நலன் மேம்பாட்டுக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் சபையில் தெரிவு செய்யப்பட்டதுடன், அக்குழுக்களின் உறுப்பினர்கள் ஒன்றுகூடி அதன் தலைவர்களைத் தெரிவு செய்து குழுத் தலைவர்களின் பெயர்களை ஒரு வாரத்துக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

கடந்த 2022ஆம் ஆண்டின் நவம்பர் மாத வரவு செலவுக் கூற்றுகளும் அறிக்கைகளும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டதுடன், இவ்வாண்டுக்கான முதலாவது கூட்டத்துக்கு சமூகமளிக்காத உறுப்பினர்களின் விடுமுறை விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு விடுமுறை வழங்கப்பட்டன.

# கல்முனையின் முன்னேற்றத்துக்கு மலேசியா ஒத்துழைப்பு வழங்கும்
## மலாக்கா மாநில ஆளுநர் உறுதியளிப்பு

**கல்முனை, சாய்ந்தமருது விசேட, மருதமுனை தினகரன் நிருபர்கள்**



கல்முனைப் பிராந்தியத்தின் முன்னேற்றத்துக்கு மலேசியாவிடமிருந்து ஒத்துழைப்புக் கிடைக்குமென, மலாக்கா மாநில ஆளுநர் கலாநிதி துன் முஹமட் அலி ருஸ்தாம் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபைக்கு நேற்று (04) முன்தினம் நல்லெண்ண விஜயம் மேற்கொண்ட போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த மலாக்கா மாநில ஆளுநர், "பல்லின மக்கள் வாழ்கின்ற கல்முனைப் பிராந்தியத்தின் கல்வி, கலாசார, சமூக அபிவிருத்தித் திட்டங்களுக்காக எம்மால் முடியுமானவரையில் உதவி செய்வதற்கு நாம் தயாராக உள்ளோம்" என்றார்.

இதன்போது, மலாக்கா மாநில ஆளுநர் துன் முஹமட் அலி ருஸ்தாமுக்கு நினைவுச்சின்னம் வழங்கப்பட்டதுடன், பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இதேவேளை, கல்முனை மாநகர முதல்வர், சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப்புக்கு நினைவுச்சின்னம் மற்றும் பரிசு மலாக்கா மாநில ஆளுநர் வழங்கி மகிழ்ச்சி பாராட்டினார்.

# மட்டக்களப்பில் முறிந்து விழும் மரக்கிளைகள் அகற்றல்



**மட்டக்களப்பு விசேட நிருபர்**

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக மட்டக்களப்பு நகரில் முறிந்து விழும் அபாயத்திலிருந்த மரக் கிளைகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கை நேற்று (04) முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

உயர் மின் வலுவைக் கொண்ட மின்சார கம்பிகளின் மேலாக இம்மரக் கிளைகள் முறிந்து விழும் அபாயத்தில் காணப்பட்டன. இந்நிலையில், மட்டக்களப்பு மின்சார சபையினர் நேற்றுக் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின்வெட்டை அமுல்படுத்தி, தமது ஆளணியினரின் உதவியுடன் இம்மரக் கிளைகளை அப்புறப்படுத்தினர்.

மட்டக்களப்பு நகரின் பயனியர் வீதியிலிருந்த ஆலமரம் மற்றும் மகாஜனக் கல்லூரி வளாகத்திலிருந்த அரச மரக் கிளைகளே இவ்வாறு அப்புறப்படுத்தப்பட்டன.


# NOTICE
## UNIVERSITY OF VAVUNIYA, SRI LANKA
## VACANCIES FOR THE POST OF TEMPORARY POSITIONS

**WALK IN INTERVIEW**

Walk in interviews for the following posts will be held on 18th January 2023 at the Board Room of the University of Vavuniya, Pambaimadu.

| Post | Time |
|---|---|
| **1) Faculty of Business Studies** | |
| Temporary Assistant Lecturer in Project Management | Commencing from 9.00 am |
| Temporary Assistant Lecturer in Human Resource Management | |
| Temporary Assistant Lecturer in Business Economics | |
| Temporary Assistant Lecturer in Accounting & Finance | |
| **2) Faculty of Applied Science** | |
| **Department of Physical Science** | |
| Temporary Demonstrator in Information Technology | 11.00 am |
| **3) Faculty of Business Studies** | |
| Temporary Instructor in English | 1.30 pm |
| Temporary Instructor in Computer Technology | |
| **4) Information Technology Centre** | |
| Temporary Instructor | |

Applicants who are interested in the above posts are requested to visit the University Website **http://www.vau.ac.lk** to obtain further details.

**Registrar**
**University of Vavuniya**
05.01.2023

COOP WENNAPPUWA

**வரையறுக்கப்பட்ட வெள்ளப்புவ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

**வாக்குரிமை பெற்ற உறுப்பினர்களின் பெயர் பட்டியலை காட்சிப்படுத்தல்**

1992இன் 11ஆம் இலக்கம் மற்றும் 1983 இன் 32ஆம் இலக்கம் கொண்ட திருத்தப்பட்ட சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1972இன் 05ஆம் இலக்கம் கொண்ட தேசிய கூட்டுறவுச் சங்க சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய 1976.05.17ஆம் திகதி சிலா./ 433 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட வென்னப்புவ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்துவத்தை பெற்று 2021.12.31 ஆம் திகதிக்கு ஓர் ஆண்டு பூர்த்தியாகின்ற வாக்குரிமை பெற்ற ஒவ்வொரு பிராந்தியம் சார்ந்த அங்கத்துவ பெயர்ப் பட்டியல் 2023.01.11 ஆம் திகதி தொடக்கம் 2023.01.25ஆம் திகதி வரை சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் மற்றும் குறித்த பிராந்தியங்களில் www.wencoops.lk என்ற இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படுவதோடு அந்த அங்கத்துவ பெயர் பட்டியலை பரீட்சித்து மேலுள்ள வர்த்தமானியின் 6:1 கட்டளைக்கு அமைய மற்றும் 7:1 கட்டளைக்கு அமைய,

1. பெயர் உள்ளடக்குவதற்கு தகுதி உடைய ஒருவரின் பெயர் உள்ளடக்கப்படாவிட்டால் அதனை இணைக்கும் படி அல்லது
2. உள்ளடக்கப்பட்டிருக்கும் ஒரு பெயர் தொடர்பில் ஆட்சேபனை இருந்தால்

அது தொடர்பில் 2023.01.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு எழுத்துமூலமாக மேன்முறையீட்டை சமர்ப்பிக்கும்படி அறியத்தருகிறோம். மேலுள்ள 2ஆம் இலக்கத்தின் கீழ் ஆட்சேபனையை வெளியிடுவதாயின், அதற்காக ஏற்க முடியுமான காரணத்தையும் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. மேலுள்ள திகதிக்கு ஆட்சேபனையை முன்வைக்காவிட்டால், இந்த பெயர் பட்டியல் சரியான பெயர் பட்டியல் என கருதி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மேலும் அறிவுறுத்தப்படுகிறது.

**வரையறுக்கப்பட்ட வென்னப்புவ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**புதிய வீதி - வென்னப்புவ தொலைபேசி:** 031-2255265, 031-2254498, **தொலைநகல்:** 031-2257848
இணையதளம்: www.wencoops.lk மின்னஞ்சல்: mpcswennappuea@yahoo.com

# மீன்பிடித்துறை அமைச்சு
## தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை (NARA)

### ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள் இலங்கையில் கடல்சார் முத்து வளர்ப்பு பண்ணையை தாபிப்பதற்கான விஷேட பரீட்சார்த்த திட்டம்

**Contract No.: P&S/IARAD/2022/121/RL**

தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையானது (NARA) பொருத்தமான தகைமையுள்ள சேவை வழங்குனர்களிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோளை (EQI) அழைக்கின்றது. கடற்கரை சமூகங்களின் பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுப்பதற்காகவும் வெளிநாட்டு செலாவணியை ஈட்டுவதற்காகவும் இலங்கையின் நீண்டகாலமாக இழந்துள்ள உயிரியல் வளத்தை மீள்தாபிப்பதற்காகவும் கடல்சார் முத்துக்களை உற்பத்தி செய்வதற்காகவும் தொழில்நுட்பவியல் அடிப்படையிலான கைத்தொழிலொன்றை அமுல்நடாத்துவதற்காகவும் ஆராய்ச்சியொன்றை நடாத்துவதற்கு NARA ஆனது தீர்மானித்துள்ளது.

புதியதொரு சாத்தியமான ஏற்றுமதி கைத்தொழிலொன்றை அபிவிருத்தி செய்வதற்காக இக்கைத்தொழிலினால் சிறந்த தரமுள்ள முத்துக்கள் உற்பத்தி செய்யப்படலை உறுதி செய்வது ஒரு தேவையாகும்.

இந்தக் கைத்தொழிலை அமுல்நடாத்தல் மற்றும் தாபித்தலுக்கு முன்னராக, ஆராய்ச்சித் திட்டமொன்று பூர்த்தி செய்யப்படுவதுடன் விஷேட பொருளாதார சாத்தியமான மாதிரிகள் பரீட்சிக்கப்படல் வேண்டும்.

**பின்வரும் வெளியீடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன:**

1. **ஆராய்ச்சி ஆரம்பம்:** சேவை வழங்குனரானவர் அமைவிட தெரிவு செய்தல், பண்ணை வளர்ப்பு, இனங்களை பண்படுத்தலின் பராமரிப்பு, ஆகக்கூடிய வளர்ச்சி மற்றும் முத்து சிப்பிகளின் தப்பிப் பிழைத்தல் ஆகியவற்றின் பாவனைக்காக உரித்தான நிபுணத்துவ வலையமைப்புக்கள் மற்றும், ஆராய்ச்சி தகவலை பெற்றுக் கொள்வதற்கான ஆதரவை பெற்றுக் கொடுத்தல்.
2. **பயிற்சி:** சேவை வழங்குரானவர் மூலக்கூறு தொழில்நுட்பவியல்களில் மற்றும் முத்துக்களின் வளர்ச்சி மற்றும் தரத்தை தூய்மையாக்கல் மற்றும் அதிகரித்தல் மற்றும் அணுக்கரு தொழில்நுட்பவியல்களில் NARA விஞ்ஞானிகளின் ஆற்றலை கட்டியெழுப்பலுக்கு ஆதரவு வழங்குவதற்காக அவசியமான வழிகளை மேற்கொள்ளல்.
3. **பொருளாதாரரீதியிலான சாத்தியமான கற்றைநெறிகள் மற்றும் ஏனையவை (தேவைப்படின்):** சேவை வழங்குரானவர் தரவின் அடிப்படையில் சாத்தியமானதொரு மாதிரி மற்றும் பொருளாதார மாதிரிகளை அபிவிருத்தி செய்து விஷேட பரீட்சித்தலுக்கான விருப்புரிமைகளை பரிந்துரைத்தல்.
4. **கல்வி:** சேவை வழங்குரானவர் மாணவர்களை பாரமெடுப்பதற்கான (MPhil or PhD) ஆதரவை வழங்குவதுடன் உள்ளூர் பல்கலைக்கழகமொன்றின் ஒன்று அல்லது இரண்டு பட்டப்பின் பட்டமாணவர்களுக்கான மூன்றாம் தரப்பு வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையிடல் ஆகியவற்றிற்கான ஈடுபாட்டிற்கான இணக்கத்தை வழங்கல்.
5. **அமுல்நடாத்தல்:** சேவை வழங்குரானவர் உள்ளூர் சமூகங்களின் பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கான சமூக அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் இரண்டாம்தர கைத்தொழில்களின் ஊக்குவித்தல் அடங்கலாக ஆதாரம், ஊக்குவிப்புசார் மற்றும் சந்தைப்படுத்தல் செயற்பாடுகள் ஆகியவைகளை நிறைவேற்றல்.
6. **வருமானத்தை பங்கிடல்:** ஆராய்ச்சியின் பின் பண்படுத்தல் திட்டமானது தொடர்ந்தும் செயற்படும்போது NARA இன் ஆராய்ச்சியை அதிகரிப்பதற்காக ஈட்டலின் விகிதமொன்றை அதற்கு வழங்கல் வேண்டும். இந்த விகிதாசாரமானது தொழில்நுட்ப முன்மொழிவுடன் சமர்ப்பிக்கப்படவுள்ள நிதிசார் முன்மொழிவில் குறித்துரைக்கப்படல் வேண்டும்.
7. **சமூக அபிவிருத்தி:** சேவை வழங்குரானவர் இந்த ஒத்துழைப்பு/ஈடுபாடு தொடர்பாக கம்பனி மற்றும் NARA இற்குமிடையில் பரஸ்பர நன்மையுள்ள தனியார் அரச பங்குடமை உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.

நிகரான செயற்றிட்டங்களின் சித்திகரமான அமுல்நடாத்தலின் உறுதிப்படுத்தப்பட்ட முன்னைய செயற்பாட்டையுடைய நிறுவனங்கள் பின்வரும் ஆவணங்கள் அடங்கலான அவர்களின் ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோளை சமர்ப்பித்தல் வேண்டும்.

1. பெயர், முகவரி மற்றும் சட்டரீதியான நிலபரம்.
2. மேலே கூறப்பட்டுள்ள செயற்றிட்ட நோக்கத்தின் அடிப்படையிலான ஆரம்ப தீர்விற்கான முன்மொழிவு.
3. கம்பனியானது கடல்சார் முத்துக்களின் உற்பத்தியாளர் இல்லை என்பதை அத்தாட்சிப்படுத்துவதற்கான சுயபிரகடணம்.
4. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, விஞ்ஞான வலையமைப்புக்கள் மற்றும் சட்டரீதியான நிபுணத்துவம், சாத்தியமான கற்கைநெறிகளின் அபிவிருத்தி மற்றும் வர்த்தக அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கும் ஆற்றல் ஆகியனவற்றில் 3 வருட அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆதரவு வழங்கும் சான்றுடனான சுயபிரகடணம்.
5. கம்பனியின் ஒன்றிணைப்பு, நிருவாக விபரங்கள், நிதிசார் ஒருமைப்பாடு மற்றும் ஆவண முகாமைத்துவ முறைமைகளின் சான்றளிக்கும் ஆவணங்களின் பிரதிகள்.

**2023 சனவரி 05 ஆம் திகதியிலிருந்து 2023 பெப்ருவரி 03 ஆம் திகதியன்று** வரையும் அல்லது அதற்கு முன்னராக வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் தகுதியுள்ள நிறுவனங்கள் மேலே குறிப்பிட்டுள்ள ஒத்துழைப்பிற்கான அவர்களின் ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோளை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய நீரியல்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை, காக்கை தீவு, மட்டக்குளி, கொழும்பு-15 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது NARA இன் நிதிப் பிரிவிலுள்ள 01 ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “Pilot experimental programme to establish Marine Pearl Farming in Sri Lanka” என தயவு செய்து குறிப்பிடவும்.

பெற்றுக் கொண்ட ஆர்வத்தை வெளிப்படுத்தும் வேண்டுகோள்களின் முறைசார் மதிப்பீடொன்றின்
பின்னர், விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு இந்த செயற்றிட்டம் தொடர்பான முன்மொழிவுகளுக்கான தேவைப்படுத்தலானது தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு உரித்தான நியதிக் குறிப்புக்களுடன் அனுப்பி வைக்கப்படும். தொழில்நுட்ப மற்றும் நிதிசார் முன்மொழிவுகள் ஆகிய இரண்டும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு அதிசிறந்த தகைமையுடைய விண்ணப்பதாரியானவர் இச்செயற்றிட்டத்தின் அமுல்நடாத்தலுக்காக தெரிவு செய்யப்படுவார்.

மேலதிக விபரங்களுக்கு பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்: Dr. (Ms.) P.P.M. Heenatigala, Head/Inland Aquatic Resources & Aquaculture Division (IARAD) of NARA (தொலைபேசி: 011 2521005. அலைபேசி: 071 8569783. மின்னஞ்சல்: **prajani15@hotmail.com**)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**NARA,**
**காக்கை தீவு,**
**மட்டக்குளிய,**
**கொழும்பு-15.**
**தொலைபேசி: 011 2521717**
**தொலைநகல்:011 2521932**
**மின்னஞ்சல்: purchasingp@nara.ac.lk**

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**ஒப்பந்த இலக்கம் : EPD/F08/02/Transport/2022**

**2023ஆம் ஆண்டு சார்பாக பாடசாலை பாடநூல்களை போக்குவரத்து செய்வதற்காக ஓட்ட/கிலோமீற்றருக்கு செலுத்தும் அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்ளல்**

# கேள்விக்கான அழைப்பு

06ஆம் மாடி இசுருபாய, பெலவத்த, பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி வெளியீட்டு திணைக்கள பெறுகைக்குழு தலைவரால் ஓட்ட/கிலோமீற்றருக்கு செலுத்தும் அடிப்படையில் 2023ம் ஆண்டிற்காக பாடசாலை பாடநூல்களை போக்குவரத்து செய்வதற்காக, பின்பக்க கதவுகளை கதவுப்பூட்டு இட்டு மூடக்கூடிய, முழுமையாக மூடப்பட்ட கீழே தரப்பட்டுள்ள நிறை தரத்துடன் சம்பந்தப்பட்ட வாகனங்களை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை வாகன உரிமையாளர்களிடமிருந்து மற்றும் வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்கும் நிறுவனங்களிலிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

(a) தார் நிறை 4.2 தொன் அல்லது அதற்கு மேற்பட்ட லொறிகள்

(b) தார் நிறை 4.2 தொன் இற்கு குறைந்த தார் நிறை 1.5 தொன்வரையான லொறிகள்

(c) தார் நிறை 1.5 தொன்னிற்கு குறைந்த லொறிகள்

} குறைந்தபட்சம் இரண்டு லொறிகள் உரிமைபோக்குவரத்து நிறுவனத்தின் பெயருக்கு அல்லது போக்குவரத்து நிறுவனத்தின் உரிமையாளரின் பெயரில் இருத்தல் வேண்டும். (நாளாந்தம் வழங்க வேண்டிய வாகனங்களின் எண்ணிக்கை 10-15 இற்கு கிடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படும்
03. மாற்றுக் கேள்விகள் ஏற்கப்படமாட்டாது
04. ஒப்பந்ததத்தின், மதிப்பீட்டுத்தொகை ரூ.30 மில்லியன் ஆகும்
05. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக தகைமை பெறுவதற்கு, சீத்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோராக (Black Listed) இல்லாதிருத்தல் வேண்டும்.
06. இதுபற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் பிரதி ஆணையாளர் (விநியோகம்) இடமிருந்து தொ.பே.இல:0112787515, 0112785306 ஊடாக அல்லது பெக்ஸ் இலக்கம் 0112787515 மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி பத்திரங்களை இசுருபாய 06ஆம் மாடியில் அமைந்துள்ள கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் நிதிப்பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
07. கேள்விப்பத்திரங்களை கொள்வனவு செய்வதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதம கணக்காளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்தல் வேண்டும் அத்துடன், 2023.01.06 முதல் 2023.01.19ம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00வரை கேள்விப்பத்திரங்களுக்காக மீளளிக்கப்படாத ரூ.10,000/- செலுத்துவதன் பேரில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
08. கேள்விப்பத்திரங்களை தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 06ஆம் மாடி, இசுருபாய, பெலவத்த, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு 2023.01.20 பி.ப.2.00 இற்கு முன் கிடைகச் செய்தல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்துவுடன் அக்கேள்விகள் அங்கு வருகைதந்துள்ள, கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
10. சகல கேள்விப் பத்திரங்களும் ரூ.150,000/- பெறுமதியான கேள்விப் பிணையொன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும் இப்பிணைமுறி 2023.05.19 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
11. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஊழியர்களுக்கு அல்லது அவர்களது கணவன்/மனைவி அல்லது தங்கியிருப்போருக்கு கேள்விகளை சமர்ப்பிக்க முடியும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு**
**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,**
**06 ஆம் மாடி, இசுருபாய, பத்தரமுல்லை**
**2023.01.06**

### அறிவித்தல்

கொழும்பு 15, மல்வத்தை வீதி, இல RB 47A விலாசத்தில் வதியும் மணிமன்னன் சந்திரகலா அல்லது சந்தனம் மணிமந்தம் சந்திரகலா ஆகிய தாங்கள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இல DCA/34/19 வழக்கில் தோன்றுவது அவசியம் என்பதனால் 2022.01.18 ஆம் திகதி அன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் 09ஆம் இலக்க மன்றில் தோன்றுமாறு அறியத்தருகின்றோம்.

**பதிவாளர்**
**கொழும்பு மாவட்ட நீதிமன்றம்**
**கொழும்பு - 12**

# சமஷ்டி அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி வடக்கில் மக்கள் கவனயீர்ப்பு போராட்டம்




***தலைமன்னார் விசேட, யாழ். விசேட, ஓமந்தை, பருத்தித்துறை விசேட, சாவகச்சேரி விசேட நிருபர்கள்***

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வு, அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி வடக்கில் நேற்று மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா நெடுங்கேணி, மன்னார், கிளிநொச்சி, நாவற்குழி போன்ற இடங்களில் கவனீயீர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்றன.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீளஒருங்கிணைக்கப்பட்டு தனி மாகாணமாக உருவாக்கப்பட வேண்டும்.', 'அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திகழ வேண்டும்' 'தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையே அரசியல் தீர்வுக்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்' போன்ற கருத்துக்கள் கொண்ட பதாகைகளை ஏந்தியவண்ணம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு,கிழக்கு சிறுபான்மை மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகள் சிறுபான்மை தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையே நடைபெறவுள்ளதாக அறிகின்றோம். அதனை நாங்கள் பெரிதும் வரவேற்கின்றோம்.

எனினும், தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் கோரிக்கைகளையும், அரசியல் தேவைகளையும் உள்ளடக்கிய வகையில் இப்பேச்சுவார்த்தைகள் அமைய வேண்டுமாயின் பேச்சுவார்த்தைகள் வெளிப்படை தன்மையுடையதாக நடைபெற வேண்டும் என்பதனை வலியுறுத்துவதாக மக்கள் தெரிவித்தனர்.

ஆனால் தற்போதைய நிலையில் தமிழ் அரசியல் கட்சிகளிடையே அரசியல் தீர்விற்கான நடவடிக்கைகள் ஒருமித்த முறையில் முன்னெடுக்கப்படவில்லை என்பதை அரசியில் கட்சியின் தலைமைத்துவங்களியேயும் பரஸ்பரம் வெளிப்படைத்தன்மையுடைய கலந்துரையாடல்களோ, ஒருமித்த முன்னெடுப்புக்களோ காணப்படாததை நாங்கள் இங்கு சுட்டிக்காட்டுகின்றோம் என மக்கள் தெரிவித்தனர்.

Save energy

# இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை

## பாரிய அளவிலான சக்தி பாவனையாளர்களை பதிவுசெய்தல்

32,000,000 மின்சார அலகுகளை (32GWh) சேமிக்கும் நோக்கத்துடனும் அதிகளவிலான தேவைப்படும் காலப்பகுதியில் 182 MW அளவிலான தேசியகட்டமைப்பிற்கான கட்டாயமாக தேவைப்படும் சுமையை நீக்குவதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தேசிய சக்தி சேமிப்பு செயற்பணிக்கு பங்களிப்பு செய்வதற்காகவும் கைத்தொழில் மற்றும் வர்த்தகம்சார் துறைகளை இலக்காகக் கொண்டு வெயில் காலத்தில் வரவிருக்கும் சக்தி நெருக்கடியை கையாளுவதற்காக இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையானது திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு விரும்புகின்றது.

உங்களின் நிறுவனமானது மாதாந்தம் 10,000 kWh இற்கு மேற்பட்ட அடிப்படையில் பாவிக்கும் நிறுவனமெனின், 2023.01.31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பின்வரும் தொடர்பை பாவித்து இலங்கை நிலைபெறுசக்தி அதிகாரசபையுடன் தயவு செய்து பதிவு செய்யவும். எம்முடன் பதிவு செய்யும் முதல் பத்து நிறுவனங்கள் தரஅங்கீகாரம் பெற்ற சக்தி கணக்காய்வாளரினால் சக்தியை சேமிக்கும் அவர்களின் அர்ப்பணிப்பிற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்காக சக்தி கணக்காய்வொன்றை இலவசமாக நடாத்துவதற்கான தகுதியைபெற்றுக் கொள்வர்.

**https://forms.gle/agGbmRbybmxuAu1XA**

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை,**
**இல.: 72,ஆனந்தகுமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு-07.**

**தொலைபேசி: 0112507030**
**தொலைநகல்: 0112575089**
**இணையதளம்: www.energy.gov.lk**

# விலைமனுக் கோரல்

## தேர்தல் ஆணைக்குழு

## தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தேவையான கடித உறைகளை வழங்குவதற்கான பெறுகை

01. தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் கீழ் குறிப்பிடப்படும் உருப்படிகளுக்காக தகைமை பெற்ற ஏலதாரர்களிடமிருந்து (Bidders) முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன

| ஏலத்தின் இலக்கம் | பெறுகையின் பெயர் மற்றும் விபரம் | தேவையான அளவு | ஏலப் பாதுகாப்பு பிணை வைப்பின் பெறுமதி (இலங்கை ரூபா) | ஏல விலைகள் திறக்கப் படும் திகதி |
|---|---|---|---|---|
| S/7/02/01/2023 | அச்சிடப்பட்ட காகிதம் (Manila, Craft, Sack Craft, White Paper) கடித உறை வகை | 4,340,000 | வர்த்தக வங்கி யொன்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏலப் பாதுகாப்பு ரூ. 1,120,000.00 அல்லது பிணை டைப்புத் தொகை ரூ. 560,000.00 | 2023.01.17 |
| | அச்சிடப்படாத காகிதம் (Manila, Craft, Sack Craft, White Paper) கடித உறை வகை | 1,385,000 | | |
| | அச்சிடப்பட்ட கடித உறை வகை (HDPE-COEXTRU TION) | 3,440,000 | | |

02. விலைமனுக் கோரல், தேசிய போட்டி அடிப்படையிலான ஏலங்கோரல் முறை (NCB) ஊடாக மேற்கொள்ளப்படும்.
03. மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பெறுகைக்குத் தேவையான விபரங்களை தேர்தல் ஆணைக்குழுவின் பெறுகைப் பிரிவினால் பெற்றுக்கொள்ள முடியுமென்பதோடு, இது சம்பந்தமாக ஆர்வம் காட்டும் ஏலதாரர்களுக்கு (Bidders) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மீளச் செலுத்தப்படாத ரூ. 1000.00 வினை தேர்தல் ஆணைக்குழுவின் சிறாப்பருக்கு (shroff) பணமாகச் செலுத்தி ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைமனுக் கோரல் ஆவணத் தொகுதியை 2023.01.09ஆம் திகதி முதல் 2023.01.16ஆம் திகதி வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலப் பகுதியிலுள் பெற்றுக்கொள்ள முடியும்.
04. பூரணப்படுத்தப்பட்ட ஆவணங்களை கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வருகை தந்து 2023.01.17ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலை மனுக்கள் நிராகரிக்கப்படும் ஏல விலைகள் 2023.01.17ஆம் தகிதி பி.ப. 2.00 மணிக்கு திறக்கப்படுவதுடன், அச்சந்தர்ப்பத்தில் ஏலதாரர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதியொருவருக்கு பங்கேற்க முடியும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கமைய அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஏலப் பாதுகாப்பு அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் சிறாப்பருக்கு (Shroff) பிணை வைப்புத் தொகையாக செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. தேர்தல் ஆணைக்குழுவின் முகவரி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்,**
**தேர்தல் ஆணைக்குழு,**
**இலக்கம் 02, சரண மாவத்தை,**
**ராஜகிரிய.**
**தொ.பே. 0112-868441-3**
**2023.01.06**

### நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## நகர அபிவிருத்தி அதிகாரசபை

# கேள்வி அறிவித்தல்

**முன்னைய கொழும்பு ஒல்லாந்த வைத்தியசாலை கடை வளாகத்தின் கடை இலக்கங்கள் 07 மற்றும் 09 மற்றும் கொழும்பு-1 முன்னைய சந்தைப்படுத்தல் திணைக்கள கட்டிடத்தின் தரை மற்றும் மேல் மாடியின் கடை இல.: டி ஆகியவற்றை மாதாந்த வாடகை அடிப்படையில் 05 வருட காலப்பகுதிக்கு வழங்குவதற்கான கேள்வி**

1. ஐந்து (05) வருட காலப்பகுதிக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் பின்வரும் கடைகளை ஒதுக்குவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வருமான கேள்விச் சபையின் (கீழ்மட்டம்) தலைவரினால் முன்வைப்புக்கள் கோரப்படுகின்றன.

| வளாகம் | கடை இலக்கம் | மாடி | மாடியின் இடப்பரப்பு | ஏற்புடையதான வரிகள் நீங்கலாக மாதாந்த வாடகை அடிப்படை (ரூபாவில்) | விலை மனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| முன்னைய கொழும்பு ஒல்லாந்த வைத்தியசாலை கடை வளாகம் | 07 | தரை மாடி | 456 | 145,000 | 150,000 |
| | 09 | தரை மாடி | 808.5 | 266,000 | 300,000 |
| முன்னைய சந்தைப்படுத்தல் திணைக்கள கட்டிடம் | தொகுதி ''டி''* | தரை மாடி | 1358 | 800,000 | 850,000 |
| | | மேல் மாடி | 2700 | | |

* தரை மற்றும் மேல் மாடிகளிலுள்ள டி தொகுதியானது வர்த்தக நோக்கத்திற்காக தனியொரு அமைப்பாக கருதப்படும்.

2. இந்த கடைகள் மாதாந்த வாடகை அடிப்படையில் 5 வருட காலப்பகுதிக்கு ஒதுக்கப்படும்.
3. ஆர்வமுள்ள சாரார் அவர்களின் முன்வைப்புக்களை ஒவ்வொரு கடைத் அலகிற்கும் மேலேயுள்ள அட்டவணையில் குறித்துரைக்கபட்டவாறான மாதாந்த வாடகை பெறுமதிகளுக்கு மேற்பட்டவாறு அமைத்தல் வேண்டும்.
4. முன்னைய கொழும்பு ஒல்லாந்த வைத்தியசாலையின் கடைகளின் அடிப்படை மாதாந்த வாடகையானது அரசாங்க பிரதான விலைமதிப்பீட்டாளரினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் முன்னைய சந்தைப்படுத்தல் திணைக்கள கட்டிட தரை மற்றும் மேல் மாடியின் கடை இல. டி இற்கான அடிப்படை மாதாந்த வாடகையானது அரசாங்க பிரதான விலைமதிப்பீட்டாளரினால் மதிப்பீடு நிர்ணயிக்கப்பட வேண்டுமென்பதுடன் இச்செயற்பாடானது இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. இதற்கமைவாக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் முன்வைப்பானது மேற்கூறப்பட்டுள்ள கடைக்கான மாதாந்த வாடகையானது அரசாங்க பிரதான விலைமதிப்பாளரின் விலைமதிப்பிற்கு குறைவாகவிருப்பின், தெரிவு செய்யப்பட்ட சாரார் மாதாந்த வாடகையை செலுத்துவதற்காக அரசாங்க பிரதான விலைமதிப்பீட்டாளரினால் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.
5. கடையொன்றிற்கு ஒரு விலைமனுவிற்கு மேற்பட்டதாக குறிப்பிட்ட விலைமனுதாரரொருவர் விலைமனுக்களை சமர்ப்பிக்க இயலாது.
6. கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டவாறு விலைமதிப்பீட்டு தகவுத்திறனின் அடிப்படையில் சித்திகரமான விலைமனுதாரர் தெரிவு செய்யப்படுவார்.
7. சித்திகரமான விலைமனுதாரர் ஏற்புடையதான வரிகளுடன் சித்திகரமான விலைமனுதாரர்களினால் முன்வைக்கப்பட்ட 3 மாதங்களுக்கான வாடகைக்கு நிகரான மீளளிக்கப்படாத முற்பணத்தை சித்திகரமான விலைமனுதாரர் செலுத்துதல் வேண்டும்.
8. மேலும், மீளளிக்கப்படாத விலைமனு வைப்பானது 3 மாதங்களுக்கு முன்வைக்கப்பட்ட மாதாந்த வாடகைக்கு நிகரான தொகையானது சித்திகரமான விலைமனுதாரரினால் செலுத்தப்படல் வேண்டும்.
9. 2023.01.09 ஆம் திகதியிலிருந்து 2023.01.27 ஆம் திகதி வரையும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடாக 2.5% மற்றும் பெசேவரியாக 15% அடங்கலாக மீளளிக்கப்படாத கட்டணமாக பத்தாயிரம் இலங்கை ரூபாவை (10,000 ரூபா) செலுத்திய பின்னர், வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் பத்தரமுல்ல, I ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 8 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, காணி கொள்வனவு செய்தல் விற்பனை செய்தல் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள சாரார் கேள்வி ஆவணத்தை கொள்வனவு செய்யலாம். மேலும், மேற்குறிப்பிட்டுள்ள காலப்பகுதியில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் காணி கொள்வனவு செய்தல் விற்பனை செய்தல் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
10. பத்தரமுல்ல, I ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 6 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, நிதிப் பிரிவில் 2023.01.31 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியானவர் (ஆண்/பெண்) திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.
11. பத்தரமுல்ல, I ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 8 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, காணி கொள்வனவு செய்தல் விற்பனை செய்தலுக்கான பணிப்பாளரிடமிருந்து அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 011-2875921, 011-2875916-20, 071-2798593 (நீடிப்பு 2960-2968)

**தலைவர்,**
**வருமான கேள்வி சபை (கீழ்மட்டம்),**
**நகர அபிவிருத்தி அதிகாரசபை.**

# இன்றைய உலகில் இன்றியமையாத ஒன்றாக திகழ்வது கல்வியே



## பட்டமளிப்பு விழாவில் அமேசன் உயர்கல்வி பணிப்பாளர் இல்ஹாம் மரிக்கார்

சர்வதேச ரீதியில் அதிகமான எதிர்பார்ப்பை கொண்டுள்ள தொழிற்துறைகளுடன் தொடர்புடைய பாடநெறிகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமேசன் உயர்கல்வி பணிப்பாளர் இல்ஹாம் மரிக்கார் தெரிவித்தார். பட்டமளிப்பு விழாவில் வரவேற்புரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இன்றைய உலகின் இன்றியமையாத ஒன்றாக திகழ்வது யாதெனில் கல்வியே ஆகும். எந்தவொரு சமூகத்தினரும் கல்வி கற்பதிலிருந்து விலகிச் செல்வது இன்றைய நவீன உலகில் மிகவும் அரிதாக காணப்படுகிறது. ஏனெனில் கல்வியின் சிறப்பை அனைத்து சமூகங்களும் புரிந்துள்ளன. இதனால் தான் இன்று கல்வியானது மனிதனின் அத்தியாவசிய தேவையாக இருக்கிறது.

கற்றவன் எந்த இடத்திற்குச் சென்றாலும் அவன் பிற சமூகத்தால் மதிக்கப்படுகின்றான். இதற்கு காரணம் அவன் கற்ற கல்வியே.

கற்றவனுக்கு எங்கும் சிறப்புண்டு. ஒருவன் தான் மரணிக்கும் வரை கல்வி கற்காமல் இருந்து தனது காலத்தை கழிப்பது மிகவும் சிரமமானதாகும்.நான் இன்றும் கற்றுக் கொண்டிருப்பதாக தெரிவித்தார்.இவ்வாறான துறையில் பணியாற்றுவது மிகவும் மகிழ்ச்சியளிப்பதாகவும் .ஒவ்வொரு வீட்டிலும் பல கல்விமான்கள் பட்டதாரிகளை உருவாக்குவது தனது தூர நோக்கு திட்டமெனவும் தெரிவித்தார். அமேசன் உயர் கல்வி நிறுவனமானது கல்வியோடு மட்டுமன்றி பல சமூக சேவைகளையும்,பல இலவச புலமைபரிசில் திட்டங்களையும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அமேசன் உயர்கல்வி நிறுவனமானது தொழில் திறன் அபிவிருத்தி அமைச்சின் மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனத்தினால் (P01/0854) பதியப்பட்ட உயர்கல்வி நிறுவனமாகும்.மேலும் பல உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புக்களுடனும்,பல்கலைக்கழகங்களுடனும் இணைந்து செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. எமது அனைத்து பல்கலைக்கழகங்களும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதாகும்.


























AMAZON COLLEGE
INTERNATIONAL CAMPUS

பம்பலபிட்டி அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா 29.12.2022 கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலே நடைபெற்றது.

பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாக பேராசிரியர் S.J.யோகராஜா(PhD) (மொழியியல் துறை, களனி பல்கலைக்கழகத்தின் முன்னாள் தலைவரும் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பதில் தலைவர்) சிறப்பு விருந்தினர்களாக டாக்டர். ஹல்ஹாரி நெத்ராஞ்ஞனி பிட்டிகல (PhD) மூத்த விரிவுரையாளர் மற்றும் ஆய்வுத்துறை மேற்பார்வையாளர் KAATSU International University Dr.Sir W.A. தேசபிரிய சாம் விஜெயதுங்க(சமாதான தூதுவர் Director GeneralSUNFO Global Federation) Dr.T விமலன்(கவுன்சில் உறுப்பினர் யாழ். பல்கலைகழகம்) R. உதயகுமார் மாகாணப் பணிப்பாளர், கல்வி பணிமனை கொழும்பு, றுசைட் கபீப்(MBA), S.முரளிதரன்(SLEAS) ஆதம் மெத்வேதிவ்(University of Ukraine ) இர்யான குஷ்னரோவா(University of Ukrain Consultantamazon College) நடாலியா மொரசோவா(Financial ConsultantRussia Consultantamazon College) ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமேசன் கல்லூரியின் டிப்ளோமா,பட்டதாரி மாணவர்களின் பட்டமளிப்புடன் விரிவுரையாளர்களுக்கும்,பங்குதார நிறுவனங்களுக்கும் அமேசன் கல்லூரியின் ஊழியர்களுக்கும் விசேட நினைவுச்சின்னம் அமேசன் உயர்கல்வி நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் இல்ஹாம் மரைகாரினால் வழங்கி வைக்கப்பட்டது. இப்பட்டமளிப்பு விழாவில் சுமார் 220 மாணவர்கள் பட்டத்தை பெற்றுக் கொண்டனர். இதில் ஆசிரியர் பயிற்சி நெறி,உளவியலும் உளவளத் துறையும்,தகவல் தொழிநுட்பம்,கணக்கியல் போன்ற பல துறைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தது. வெறும் புத்தக கல்வியை மட்டும் மையமாக கொள்ளாமல், மாணவர்களுகிடையே சுயவேலைத்திட்டங்கள் (Individual Project) பயிற்சி பட்டறைகள்(Practical Workshops),வெளிநாட்டு மாணவர்களின் தொடர்பாடல்(Foreign Students exchange)பல உள்நாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டு மாணவர்களுக்கு Individual Training போன்றவற்றை வழங்கி தொழில் சந்தைக்கு ஏற்றவாறு மாணவர்களை தயார்படுத்தி அனுப்புகின்றமை விசேட அம்சமாகும்.

விசேடமான பாடநெறிகள்:

Diploma/HND/BA In Teacher Training
Diploma/HND/BA/BED/In Montessori & Child Care Education
Diploma/HND/BA/BSc In psychology& counselling
Diploma/HND/BA In Child Psychology
Diploma/HND/BA In Business Management
Diploma/HND/BA In English language
Diploma In Childcare
Diploma/HND/BA In Hotel Management.

பிரதம அதிதி பேராசிரியர் S.J யோகராஜா தனது விசேட உரையில்,

கல்வி என்பது இக்கால கட்டத்தில் இலகுவாகவும் இலவசமாகவும் பெற்றுக்கொள்ள கூடிய ஒன்றாகவுள்ளது என்றும் அதற்காக நாம் காலங்களையும் நேரங்களையும் ஒதுக்கி பல தியாகங்களை செய்வதன் மூலமாக பெற்றுக்கொள்ள முடியும்.எத்தகைய சவால்கள் எதிர்காலத்தில் வந்த போதிலும் நாம் பெற்ற கல்வியின் மூலமாக சிறந்த தீர்வினை பெற்றுக்கொள்ள முடியுமென்றும் எடுத்துரைத்தார்.

# நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையில் புதுவருட ஆரம்ப நிகழ்வு





சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்பும் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையில் சேவையாற்றும் ஊழியர்கள் 2023 ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் சத்தியப்பிரமாண நிகழ்வு இரத்மலானையிலுள்ள தலைமை அலுவலகத்தில் (02) நடைபெற்றது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தலைவர் நிசாந்த ரணதுங்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சுகாதார மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த உட்பட அமைச்சின் மற்றும் சபையின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (படங்கள்: பேருவளை விசேட நிருபர் )

# வட மத்திய மாகாண சபை அரச ஊழியர்கள் புதுவருடத்தில் கைகோர்ப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**





இளைஞர்களின் சுபிட்சமான எதிர்காலம் தொடர்பில் பல பாரிய வேலைத்திட்டங்களை வடமத்திய மாகாண சபை ஊடாக ஆரம்பிப்பதற்கு சகல அதிகாரிகளுடனும் கைகோர்த்து 2023 ம் ஆண்டின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தெரிவித்தார்.

வடமத்திய மாகாண சபையில் கடமையாற்றும் அரச சேவையாளர்கள் தமது கடமைச் செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் நிகழ்வு (02) ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் சபை வளாகத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது சர்வமத தலைவர்களின் பிரார்த்தனை இடம்பெற்றதுடன். அரச சேவையாளர்கள் தமது கடமை உறுதிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இதன்போது வடமத்திய மாகாண சபை பிரதான செயலாளர் சந்திரசிறி பண்டார, ஆளுநரின் செயலாளர் நயனா திஸாநாயக்க உட்பட மாகாண அமைச்சுக்களின் சகல செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

# ஆசியக் கிண்ணத்தில் இலங்கை ஆப்கான், பங்களாதேஷ் குழுவில்



இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆசியக் கிண்ண போட்டிகளில் ஆடும் அணிகள் குழுநிலையாக பிரிக்கப்பட்டிருக்கும் விபரத்தை ஆசிய கிரிக்கெட் கௌன்ஸில் நேற்று (05) வெளியிட்டது.

இதில் இலங்கை அணி பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் உள்ள குழுவில் இடம்பெற்றிருப்பதோடு இந்தியா மற்றும் பாகிஸ்தான் உடன் தொடருக்கு தகுதி பெறும் அணி மற்றக் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளது.

எனினும் 2023 ஆசியக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும் மைதானங்கள் பற்றி எந்த விபரமும் இந்த அறிவிப்பில் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் போட்டிகள் பாகிஸ்தானில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தபோதும் தொடரை பொது இடத்திற்கு மாற்றும் பேச்சுகள் இடம்பெற்று வரும் நிலையில் அதனையொட்டி சர்ச்சை நீடித்து வருகிறது.

இதில் மொத்தம் 13 போட்டிகள் நடைபெறவுள்ளதோடு குழு நிலை, சுப்பர் 4 மற்றும் இறுதிப் போட்டிகளான ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

கடந்த ஆண்டில் டி20 வடிவத்தில் நடந்த ஆசியக் கிண்ணத் தொடரில் இலங்கை நடப்புச் சம்பியனாக இருக்கும் நிலையில் அடுத்த ஆசியக் கிண்ணத் தொடர் ஒருநாள் வடிவத்திலேயே நடைபெறவுள்ளது. இதேவேளை 19 வயதின் கீழ் ஆசியக் கிண்ணத் தொடர் டிசம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளதுடன், இதற்கான குழு விபரமும் வெளியிடப்பட்டுள்ளது. இதில் குழு ஒன்றில் இந்தியா, பாகிஸ்தான் அணிகளுடன், தகுதி பெறும் இரண்டு அணிகள் இடம்பெறவுள்ளன. குழு இரண்டில் இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் தகுதிபெறும் அணிகள் இடம்பெறவுள்ளன.

# சவூதிக்கு தென்னாபிரிக்கா என்று கூறிய ரொனால்டோ




செய்தியாளர் கூட்டத்தில் சவூதி அரேபியாவுக்குப் பதிலாக தென்னாபிரிக்கா என்று கூறிய கிறிஸ்டியானோ ரொனால்டோவின் வீடியோ சமூகத் தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வருகின்றது.

“தென்னாபிரிக்காவுக்கு வந்ததால் எமது கால்பந்துப் பயணம் முடிந்து விடவில்லை” என்று அவர் கூறியதாக பி.பி.சி செய்தி நிறுவனம் தெரிவித்தது.

கடந்த செவ்வாயன்று (ஜனவரி 3) சவூதி அரேபியாவில் நடந்த செய்தியாளர் கூட்டத்தில் அவர் தவறுதலாகக் கூறியதை எவரும் திருத்தவில்லை. அனைவரும் அதற்குப் பதிலாக அவருக்குப் பலத்த வரவேற்பை அளித்தனர் என்று பி.பி.சி கூறியது. ஆனால் சமூகத் தளங்களில் பலர் அவரைத் திருத்தியதோடு கேலியும் செய்தனர்.

அவர்களில் ஒருவர், “உங்களுக்கு 200 மில்லியன் யூரோ சம்பளம் கிடைக்கவிருக்கிறது. ஆனால் நாட்டின் பெயர் உங்களுக்குச் சரியாகச் சொல்லத் தெரியவில்லை. பரவாயில்லை, தென்னாபிரிக்காவுக்கு வருக வருக என வரவேற்கிறோம்,” என்று ட்விட்டரில் தெரிவித்தார்.

அண்மையில் ரொனால்டோ 200 மில்லியன் யூரோவுக்கும் அதிகமான தொகையில் சவூதியின் அல் நாசிர் அணியுடன் இணைந்தார்.



அட்டாளைச்சேனை ஹைலண்ட் விளையாட்டுக் கழக கால்பந்து அணியின் தலைவர் எப். ஹாஜித் தலைமையில் கால்பந்து வீரர்களுக்கு காலணிகள் வழங்கி வைக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம். *(படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)*

# விலகினார் சம்சன்

*இலங்கைக்கு எதிரான எஞ்சியுள்ள டி20 போட்டிகளில் இருந்து இந்திய விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பாட்ட வீரர் சஞ்ஜு சம்சன் காயம் காரணமாக விலகியுள்ளார்.*

*இலங்கையுடனான முதலாவது டி20 போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த சம்சன் பௌண்டரி எல்லையில் பந்தை தடுக்க முயன்றபோது இடது முழங்காலில் காயத்திற்கு உள்ளானார்.*

*இதனைத் தொடர்ந்து ஸ்கேன் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட அவருக்கு ஓய்வெடுத்துக் கொள்ளவும் மருத்துவ சிகிச்சை பெறவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் சஞ்ஜு சம்சனின் இடத்திற்கு ஜிதேஷ் ஷர்மா அழைக்கப்பட்டுள்ளார்.*

*டி20இல் 147.93 ஓட்டவேகத்தைக் கொண்ட ஜிதேஷ் ஷர்மாவின் ஓட்ட சராசரி 30க்கு மேல் என்பது குறிப்பிடத்தக்கது.*



# பிரட்மனை முந்தினார் ஸ்மித்

*தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் முடிவில் உஸ்மான் குவாஜா மற்றும் ஸ்டீவன் ஸ்மித்தின் சதங்கள் மூலம் முதல் இன்னிங்ஸை ஆடிவரும் அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுகளை இழந்து 475 ஓட்டங்களை பெற்றுள்ளது.*

*ஸ்டீவன் ஸ்மித் 104 ஓட்டங்களை பெற்றதன் மூலம் அவுஸ்திரேலிய ஜாம்பவான் டொன் பிரட்மனை பின்தள்ளி தனது 30 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். அதேபோன்று குவாஜா டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களாக ஆட்டமிழக்காது 195 ஓட்டங்களை பெற்றுள்ளார்.*

*தென்னாபிரிக்க அணி ஏற்கனவே முதல் இரு டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வி அடைந்து தொடரை இழந்த நிலையிலேயே மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் ஆடி வருகிறது.*



# ஹரியை தாக்கிய வில்லியம்



பிரிட்டிஷ் இளவரசர் ஹரி தனது மூத்த சகோதரர் இளவரசர் வில்லியம்மினால் தாக்கப்பட்டது குறித்து தனது புதிய புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதை தி கார்டியன் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

ஹ ரி யின் நினைவுக் குறிப்புகளைக் கொண்ட “ஸ்பயர்’ என்ற புத்தகம் இந்த மாத நடுப்பகுதியில் வெளியிடப்படவுள்ளது. பிரிட்டிஷ் அரச குடும்பத்துடன் முறுகல் இருக்கும் நிலையிலேயே அவர் இந்தப் புத்தகத்தை வெளியிடவுள்ளார்.

அதில் 2019 ஆம் ஆண்டு நிகழ்ந்த சம்பவம் ஒன்றை ஹரி விபரித்துள்ளார். லண்டனில் இருக்கும் அவரது வீட்டின் சமையல் அறையில் வைத்து ஹரி மற்றும் வில்லியமுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன்போது ஹரியின் மனைவி மேகன் மர்கலை ‘சிக்கலானவர்’, ‘மூர்க்கமானவர்’ என்று திட்டி இருக்கும் வில்லியம், ஹரியை கீழே தள்ளியுள்ளார்.

“அவர் எனது கழுத்துப் பட்டையை பிடித்து, எனது மாலையை பீய்த்ததோடு என்னை தரையில் தள்ளிவிட்டார்” என்று ஹரி குறிப்பிட்டிருப்பதாக கார்டியன் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தனது சகோதரரை வெளியேறும்படி ஹரி குறிப்பிட்டுள்ளார். அப்போது வில்லியம் வருந்தினார், மன்னிப்புக்கேட்டார் என்று ஹரி தெரிவித்துள்ளார்.

## சர்வதேச செய்திகள்

# முன்னாள் பாப்பரசர் நல்லடக்கம்



காலஞ்சென்ற முன்னாள் பாப்பரசர் 16ஆம் பெனடிக்ட் பூதவுடல் வத்திக்கானில் நேற்று (05) நல்லடக்கம் செய்யப்பட்டது.

அடக்க திருப்பலிக்கு பின்னர் அவரது உடல், சைப்ரஸ் மர பெட்டிக்குள் வைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. புனித பீட்டர் பசிலிகா தேவாலயத்திற்கு முன்னால் புனித பீட்டர் சதுக்கத்தில் இடம்பெற்ற இறுதிக் கிரியையில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

16ஆம் பாப்பரசரின் வேண்டுகோலுக்கு இணங்க இறுதிக் கிரியைகள் எளிமையான முறையில் நடத்தப்பட்டதாக வதித்திக்கான தெரிவித்துள்ளது. இதில் இத்தாலியில் இருந்து பிரதிநிதிகள் மற்றும் முன்னாள் பாப்பரசரின் ஜெர்மனியில் உள்ள உறவினர்களே பங்கேற்றனர்.

இறுதிச் சடங்கு பாப்பரசர் பிரான்ஸிஸ் தலைமையிலேயே இடம்பெற்றது. 220 ஆண்டுகளில் இறுதிச் சடங்கு நிகழ்வில் பதவியில் உள்ள பாப்பரசர் ஒருவர் அவருக்கு முன்னர் இருந்த பாப்பரசரின் இறுதிச் சடங்கை நடத்துவது இது முதல் முறை என்று வத்திக்கான் தெரிவித்தது.

90க்கும் அதிகமான பாப்பரசர்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் பசிலிக்கா தேவாலயத்திற்கு கீழ் இருக்கும் கல்லறையிலேயே அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. முன்னதாக கடந்த மூன்று நாட்களில் முன்னாள் பாப்பரசரின் பூதவுடலுக்கு 200,000க்கும் அதிகமான மக்கள் அஞ்சலி செலுத்தியதாக வத்திக்கான் தெரிவித்தது.

பாப்பரசர் 16ஆம் பெனடிக்ட் உடல் ஆரோக்கியத்தை காரணம் காட்டி பதவியில் இருந்து விலகி சுமார் பத்து ஆண்டுகளை எட்டும் நிலையிலேயே கடந்த டிசம்பர் 31 ஆம் திகதி தனது 95 ஆவது வயதில் காலமானார்.

# வீட்டுக்குள் ஒரே குடும்பத்தின் சுடப்பட்ட எட்டு சடலங்கள் மீட்பு



அமெரிக்காவின் தெற்கு உட்டாவில் இருக்கும் வீடு ஒன்றில் ஐந்து சிறுவர்கள் ஒட்பட ஒரே குடும்பத்தின் எட்டு உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

குடியிருப்புப் பகுதியில் பொலிஸார் கடந்த புதன்கிழமை (04) பாதுகாப்புச் சோதனை ஒன்றில் ஈடுபட்டபோதே இந்த சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கு எந்த அச்சுறுத்தலும் இருப்பதை காணவில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சிறு தொலைதூர நகரில் 8,000 வரையான மக்கள் வாழ்கின்றனர். “இது ஏன் நடந்தது என்று எமக்குத் தெரியவில்லை. எம்மால் இது பற்றி ஊகிக்கவும் முடியாதுள்ளது” என்று நகர முகாமையாளர் ரொப் டொட்சன் தெரிவித்துள்ளார்.

அந்தக் குடும்பத்தினர் ஒரே தேவாலயத்திற்கு வருவதால் தமக்கு நன்றாகத் தெரியும் என்று அதே நகரைச் சேர்ந்த ஆரோன் டயமன் என்பவர் தெரிவித்துள்ளார். “அவர்கள் அற்புதமான மற்றும் அழகான குடும்பம்” என்று குறிப்பிட்ட அவர், சிறுவர்களின் தந்தை காப்புறுதி நிறுவனம் ஒன்றில் வேலை பார்க்கிறார் என்றார்.

### சீனா எல்லையை திறக்க திட்டம்:

# ஹொங்கொங்கில் தடுப்பூசி பெற மக்கள் முண்டியடிப்பு



ஹொங்கொங்கில் சீனாவுக்கான எல்லை திறக்கப்படுவதை ஒட்டி மக்கள் தடுப்பூசி பெறுவதற்கு விரைவதாகக் கூறப்படுகிறது.

எல்லை திறந்தால் வைரஸ் வேகமாகப் பரவும் என்ற அச்சம் நிலவுகிறது.

அரசாங்கத்தின் பயொஎன்டெக் தடுப்பூசி நிலையங்களில் கடந்த சில நாட்களாகப் பெரிய அளவில் முன்பதிவு நடைபெறுகிறது. அடுத்த மாதம் வரை தடுப்பூசிக்கான முன்பதிவு நிறைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த சில வாரங்கள் வரை ஹொங்கொங்கில் முன்பதிவு இல்லாமல் யார் வேண்டுமானாலும் தடுப்பூசி நிலையத்துக்குச் செல்லலாம் என்ற நிலை இருந்தது.

அப்போது ஆர்வம் அதிகம் இல்லை. தடுப்பூசி நிலையங்கள் காலியாகக் கிடந்தன. இப்போது சீனத் தலைநிலத்தில் கொவிட்–19 பரவல் அதிகரிப்பதால் ஹொங்கொங் வாசிகள் தடுப்பூசியை நாடுகின்றனர் என்று கூறப்படுகிறது. சீனா ஹொங்கொங்கிற்கான எல்லையை வரும் எட்டாம் திகதி திறக்கவுள்ளது.

# 18,000 ஊழியர்களை நீக்குகிறது அமேசான்




அமேசான் நிறுவனம் மேலும் 18,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.

கொரோனா நோய்ப் பரவலுக்கு பின்னர் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார சூழல் காரணமாக ட்விட்டர், மெட்டா நிறுவனங்கள் தங்களின் ஊழியர்களை கடந்தாண்டின் இரண்டாம் பாதியில் பணியிலிருந்து நீக்கம் செய்தனர்.

இதன் வரிசையில் கடந்தாண்டு நவம்பர் மாதமே 10,000 ஊழியர்களை அமேசான் நிறுவனம் பணியிலிருந்து நீக்கம் செய்திருந்தது.

இந்நிலையில், அமேசான் தலைமை செயல் அதிகாரி ஊழியர்களுக்கு கடந்த புதன்கிழமை (04) காலை அனுப்பிய செய்தியில்,

தற்போது நிலவும் கடினமான பொருளாதார சூழலை எதிர்கொள்வது மிகவும் சவாலாக உள்ளது. இதனால், மேலும் 18 ஆயிரம் ஊழியர்களை பணிநீக்கம் செய்ய முடிவெடுத்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த பணிநீக்கமானது இந்தாண்டு ஆரம்பத்தில் இருந்து நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பணிநீக்கமானது அமேசான் வரலாற்றிலேயே மிகப்பெரியதாக கருதப்படுகிறது.

புத்தாண்டு பரிசை எதிர்பார்த்த ஊழியர்களுக்கு, ஆண்டின் முதல் வாரத்திலேயே அதிர்ச்சி அளித்துள்ளது அமேசான் நிறுவனம்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 6ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.